விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5374)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 21 திங்கட்கிழமை (04.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 047

# தம்பி பிரபாகரன் உணர்த்தியதை புரிந்து செயற்பட வேண்டும்

## விக்னேஸ்வரன் வலியுறுத்தல்





(யாழ்ப்பாணம்)

ஒரு கொள்கையின் கீழ் ஒன்றுபட்டுச் செயற்படுவதே காலத்தின் தேவை என்பதை அன்று தம்பி பிரபாகரன் உணர்த்தியதைப் புரிந்து கொண்டே நாம் செயற்படவேண்டும். இதனையே மக்களும் விரும்புகின்றார்கள் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். (03-ம் பக்.)

## சுதந்திரதினம்
## 545 கைதிகள் இன்று விடுவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 71ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 545 சிறைக் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் இன்று விடுவிக்கப்படுகின்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் பொதுபல 24

## வர்த்தகருக்காக பணிப்பாளர் பதவி நீக்கப்பட்டாரா?
## மகிந்த காட்டம்

(கொழும்பு)

வர்த்தகர் ஒருவரை பாதுகாக்கவே சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் பி.எம்.எஸ்.சார்ள்ஸை அரசாங்கம் பதவியில் இருந்து நீக்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சாடியுள்ளார்.

அமைச்சர்களுக்கு தேவையான வகையில், அநீதியான முறையில் அரச அதிகாரிகளை இட 23

## விக்னேஸ்வரனின் அணியில் இணையுமாறு கூட்டமைப்புக்கு ஆனந்தன் எம்.பி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள ஒரு கட்சியின் சுயநல அரசியலால் இராஜதந்திரப் பயணத்தில் தோற்றுவிட்டோம் என்பதை மக்கள் மத்தியில் ஒப்புக்கொண்டு விட்டு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஓரணியாக பயணிக்க முன்வாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரி 02



## சுதந்திரதினத்தை முன்னிட்டு இன்று எதிர்ப்பு போராட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு மற்றும் தமிழர் வாழும் புலம்பெயர் தேசம் எங்கும் இன்று எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன

இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு கரிநாள் என அடையாளப்படுத்தி பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இந்த போராட்டங்கள் பல பகுதிகளில் இடம்பெறவுள்ளன.

இலங்கையின் 71 ஆவது சுதந்திரதினம் இன்று கொண்டாடப்படும் நிலையில் தமிழ் மக்களின் உரிமைகள் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்பன தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டும் ஏமாற் 23

## புலிகள் செயற்பட்டது போன்று கூட்டமைப்பால் செயற்பட முடியாது
### என்கிறார் சுமந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டதனைப் போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் செயற்பட முடியாது. கூட்டமைப்பினர் ஒரு வித்தியாசமான அணி என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார். 24



## மக்கள் உங்களில் நம்பிக்கையிழக்க நீங்களே காரணமாகிவிட்டீர்கள்
### சுமந்திரன் முன்னிலையில் அருட்தந்தை குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மக்கள் உங்களில் நம்பிக்கையிழக்க நீங்களே காரணமாகிவிட்டீர்கள் என சாவகச்சேரி புனித லிகோரியர் ஆலய அருட்தந்தை றெக்ஸ் சௌந்தரா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.

சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற கற்றோர் கருத்தறிதலும் மூத்தோர் மூதுரையும் என்ற மக்கள் மனமறியும் நிகழ்வில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இன்று வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை 23

## வல்வெட்டித்துறையில் மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

(கரணவாய்)

கோழி எடுத்து வரும் பெட்டியை சுத்தம் செய்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி பலியானதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வல்வெட்டித்துறை ஊரிக்காடு பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அக்கரை. 24

## தேசிய அரசில் இணைய சு.கவினர் ஆர்வம்!

(கொழும்பு)

தேசிய அரசை அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள யோசனை எதிர்வரும் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் அதில் இணைந்து கொள்ளவுள்ளனர் என தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஒரு உறுப்பினருடன் இணைந்து, தேசிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ளது.

அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்த யோசனையை முன்வைத்திருப்பதாக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. 24

## தமிழ் மக்களின் அழுகுரலை சொந்தக்குரலில் கேட்கின்றேன்
### - ஆளுநர் சுரேன் ராகவன்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அழுகுரலை தனது சொந்த குரலில் கேட்பதாக வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்தின் 32 வருட வரலாற்றில் நியமிக் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகள் இல்லாத காலத்தில் அவர்களை விமர்சிப்பது கூட்டமைப்பை கீழிறக்கியுள்ளது

## மருத்துவர் அச்சுதன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அடையாளமாக காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளை அவர்கள் இல்லாத போது கூட்டமைப்பினர் விமர்சிப்பது கூட்டமைப்பினரை அவர்களின் நிலையில் இருந்து கீழ் இறக்கி விட்டிருப்பதாக வரணி பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதி அச்சுதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை மக்கள் கருத்தாடல் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சயந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கைதிகள் விடயத்தில் கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டும்.

அபிவிருத்தி விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இறைவரி செலுத்துவதில் யாழ் மக்களே முதலில் செலுத்துகிறார்கள். ஆனால் அபிவிருத்தியிலே பின்னுக்கு நிற்கிறோம்.

போதை, குடிபானம் விடயத்தில் கல்விச் சமூகம் குறிவைக்கப்படுகின்றனர். இது விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பெரிய கட்சி ஒன்றுதான் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்த வேண்டும். அவ்வாறான கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்றார். (மு-60)

## 90 சதவீதத்தால் சங்க நடவடிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது

(கொழும்பு)

தினசரி சுங்கத்தினால் விடுவிக்கப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 90 சதவீதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுங்க தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு 1500 க்கும் 2000 க்கும் இடையில் கொள்கலன்கள் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்படும் நிலையில், தற்போதைய நிலையில் அது 100க்கும் 200க்கும் இடையில் வரை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் தமது தொழிற்சங்க போராட்டத்தை வேலை நிறுத்த போராட்டமாக முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக சுங்க ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (மு-3)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி தம்பிராஜா



எமது சங்கத்தின் அங்கத்தவரும் கைதடி சித்த போதனா வைத்திய சாலையின் மருத்துவருமாகிய திரு.த.திலீபன் அவர்களின் அன்புத் தந்தை,

**அமரர் சின்னத்தம்பி தம்பிராஜா**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (7401)

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம், இலங்கை.


# தொண்டர்கள் தேவை

தற்கொலைகளைத் தடுப்போம்!

***உங்கள் நேரத்தில் ஒரு துளியை, முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச் செலவிட நீங்கள் தயாரா?***

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம் அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில் பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம் எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில் எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே.
அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.

(C-5384)

உடனே அழையுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)

**077 900 8776** (மு.ப. 9.00 - பி.ப. 1.00)


# மரண அறிவித்தல்

## மத்தியாஸ் அலெக்ஸ்சான்டர்



*யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட மத்தியாஸ் அலெக்ஸ்சான்டர் 03.02.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் - மாகிறேற்றின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும், ராஜன், றதி, வேவி, றூவி, றோஸ், யூஜின், யூட், யூலன், கஜசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகதினி, தங்கராஜா, ஜேசுதாஸ், றொபின், மனோகரசீலன், வளர்மதி, றஜனி, எலின் அனிற்றா ஆகியோரின் மாமனும், பென்ஜோண், கிறிஸ்ரி, பிரவீன், மைக்கல், றொணா, பேணா, சணா, றதினி, நிரோ, பேபினி, வேஜினி, ஜெனி, றொஷானி, றூபினி, றொஷான், சிறானி, சியான், தீபக், தீபிகா, தௌமிஷா, ஜோயல், ஜேடன், எம்மா, மீரா, வர்ஷன், அன்ரசன் ஆகியோரின் பேரனுமாவார்.*

*அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 04.02.2019 மாலை 3.30 மணியளவில் இல 30/3 கெரவலப்பிட்டிய கெந்தளை, வத்தளையிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து நாயக்ககந்த சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

இல. 30/3, கெரவலப்பிட்டிய கெந்தளை, வத்தளை. (7051)

தகவல் : குடும்பத்தினர்
வேவி : 011 293 5938, றதி : 077 283 7775
றோஸ் : 077 065 3850

## விக்னேஸ்வரனின் அணியில் இணை...

...வித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ் மக்களை பொறுத்த வரையில் தற்போது தமது தலைமைத்துவம் தொடர்பில் மிகுந்த விரக்தி ஏற்பட்டுள்ளது. தற்போதைய தமிழ்த் தலைமைகள் என்று கூறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது நலன் சார்ந்தே செயற்படுகின்றனர். அதிலும் கூட்ட மைப்பில் உள்ள ஒரு கட்சியினர் சுயநலனுக்காக கொள்கையில் இருந்து விலகி மக்களுக்கு துரோ கம் இழைத்து வருகின்றனர்.

பொறுப்புக்கூறல் இல்லாமல் போதற்கு கூட்டமைப்பினரே முழுக்காரணம்.

கூட்டமைப்பினர் தாம் இராஜதந்திர ரீதியாக செயற்பட்டு வருவதாக கூறி தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டு விட்டனர்.

இதனால் இன்றும் மக்கள் தெருவில் இருந்து போராடிக் கொண்டிருக்கின்றனர். அரசின் வரவு செலவு திட்டங்களுக்கு கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கி வருகின்றது.

அரசியல் தீர்வினை காரணம் காட்டி இலங்கை அரசு மேற்கொண்ட போர்க்குற்றம் தொடர்பான விசாரணைகளை கால அவகாசம் வாங்கி அந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவித்துள்ளது.

போர்க் குற்ற விசாரணை, பொறுப்புக் கூறல் விடயங்கள் இல்லாமல் போனதற்கு முழு பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பட்ஜெட்டுக்கு வழங்கிய ஆதரவால் வடக்கில் விகாரைகள் முளைக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசின் வரவு செலவுத் திட்டத்துக்கு தொடர்ச்சியாக ஆதர வினை வழங்கி வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் அடைந்த நன்மை என்ன? ஒவ்வொரு வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அதன் ஊடாக இராணுவவசம் உள்ள காணிகளில் புதிதாக புத்தர் சிலைகளும், விகாரைகளும் முளைக்கின்றன. காணிகள் அபகரிக்கப்படுகின்றன.

அவ்வாறு பறிக்கப்படும் காணிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. கூட்டமைப்பினர் இராஜதந்திரமாக, செயற்படுகின்றனர் என்றால் இவை எல்லாம் எவ்வாறு நடக்கின்றன. எனவே இவர்களின் இராஜதந்திர பயணங்கள் தோல்வியடைந்து விட்டன. இதனை மக்கள் மத்தியில் ஒப்புக் கொண்டு விட்டு விக்னேஸ்வரன் தலைமையிலான மாற்று அணியில் அனைவரும் ஓரணியில் திரளுங்கள் என அழைப்பு விடுக்கின்றேன் என்றார். (மு-9)


# பெண் பணியாள் தேவை

சமையல் மற்றும் வீட்டு வேலைகளைத் தங்கி நின்று செய்யக்கூடிய 40வயதிற்கு மேற்பட்ட பணியாளர் தேவை
உணவு ,தங்குமிடம் தரப்படும்
சம்பளம்.ரூபா 18.000 முதல் 20.000வரை
( வேலைக்கேற்ப மாறுபடும் )
தொடர்பு: 0764847171 (நெல்லியடி)

(C-5388)


# முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு

மண்ணில் 02.06.1995

விண்ணில் 17.01.2018



அமரர்

## சிறிசந்திரன் கனுசாந்த்

எந் நாளும் குறையாத அன்போடு
புன்முறுவல் தவழும் முகத்தோடு
கண்மணியாய் வந்த கனுவே
வஞ்சமில்லா உந்தன் முகம்
நெஞ்சிலாடுதே – நீ கதைகள்
சொல்லி சிரிப்பதெல்லாம்
கண்ணில் தோன்றுதே
காலன் உனைப் பாதிவயதில்
ஏன் பறித்தானோ?
ஓராண்டு சென்று விட்டதே
உன் பிரிவால் தேற்றுவாரின்றி
தேம்பி அழுகின்றோம்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 05.02.2019 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கண்ணீருடன் குடும்பத்தினர்**

இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.

077 668 4939

(C-5385)

## ‘கூட்டமைப்பு செல்லும் பாதை எம்மை நாம் அழித்துக்கொள்ள வழிவகுக்கும்’



# ஒரு கொள்கையின் கீழ் கட்சிகள் ஒன்றுபடுதல் காலத்தின் தேவை

## தம்பி பிரபாகரன் உணர்த்தியதைப் புரிந்து கொண்டே நாம் செயற்பட வேண்டும்-நீதியரசர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தற்போது செல்லும் பாதை எம்மை நாம் அழித்துக் கொள்வதற்கு வழி வகுக்கும் என்பதே எமது கணிப்பு எனத் தெரிவித்த வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், ஒரு கொள்கையின் கீழ் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படுவதே காலத்தின் தேவை என்பதை அன்று தம்பி பிரபாகரன் உணர்த்தியதைப் புரிந்துகொண்டே நாம் செயற்படவேண்டும் இதனையே மக்கள் விரும்புகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

யாரேனும் பிழைகள் செய்திருந்தால் அவற்றை மன்னித்து கொள்கைகள் அடிப்படையில் சேர்ந்து முன்னேறுவ்தே நாம் தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடிய பலத்த சேவையாகும். இதனை தான் தம்பி பிரபாகரன் செய்தார். ஏன் எம்மால் முடியாது? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய மகாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும்தெரிவிக்கையில்,

நான் தமிழ் மக்கள் கூட்டணியின் ஸ்தாபகராக இருந்து கொண்டு ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின் பிராந்திய மாநாட்டில் கலந்துகொள்வது சரியா என்று கேட்டு எனது மின்னஞ்சலுக்கு பலர் கேள்விகளை அனுப்பி இருக்கின்றார்கள். சிலர் இவ்வாறு நான் கலந்து கொள்வது தவறு என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான எனது பதிலை வழங்குவது பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயற்பாடுகளை நான் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பிராந்திய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு எனக்கு அழைப்பிதழ் வழங்கப்பட்டு நான் அதனை ஏற்றுக்கொண்டு விட்டேன்.

அத்துடன்.ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியின்கூட்டங்களில்ஏற்கனவே நான் கலந்து கொண்டிருந்தமையையும்சற்று நேரத்திற்கு முன்னர் கூறியிருந்தேன். எனவே ஈ.பி.ஆர்.எல்.எவ்.களம் எனக்கு புதிதல்ல.

### இனத்துக்கு குழிபறிப்பு

எமக்குள் ஒருவருக்கொருவர் முட்டி மோதிக்கொண்டு எமது இனத்துக்கு நாமே குழிபறித்துக்கொள்ளும் நிலைமை இனிமேலும்வேண்டாம்என்றே தம்பி பிரபாகரன் முரண்பட்டு நின்ற பல்வேறு தமிழ்க் கட்சிகளை தூர நோக்கு சிந்தனையுடன் ஒன்றுசேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார். ஆனால், பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புகொள்கை மாறி பிழையான வழியில் செல்ல முற்பட்டபோது அகில இலங்கை தமிழ் காங்கிரசும் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் வெளியேறி சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் மக்கள் பேரவையின் கீழ் ஒரு பொது நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டன. தமிழ் மக்கள் பேரவையால் நடத்தப்பட்ட "எழுக தமிழ்" நிகழ்வுகள்உட்பட பல்வேறு செயற்றிட்டங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ் எம்மோடு ஒன்றாக உழைத்திருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவ்வாறே உழைத்திருக்கின்றது. அதன் தலைவரின் மூன்று தலைமுறைகளுடன் தொடர்பு வைத்திருந்தவன் நான்.

அதேவேளை, தமிழ் மக்கள் கூட்டணியை உருவாக்கிய பின்னர் எமது கொள்கைகளை ஏற்று ஒன்றாக செயற்பட்டு எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு என்னுடன் கைகோர்க்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே நிற்கும் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். இதற்கு ஈ.பி.ஆர்.எல். எவ், தமிழர் சுயாட்சி கழகம், பசுமை கட்சி ஆகிய கட்சிகள் உடனடியாகவே தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் இது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த கால கசப்பான சம்பவங்களை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு "நான் சுற்றவாளி நீ குற்றவாளி" என்று ஒருவரோடு ஒருவர் நாம் மோதிக்கொண்டிராமல் ஒரு கொள்கையின் கீழ் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படுவதே காலத்தின் தேவை என்பதை அன்று தம்பி பிரபாகரன் உணர்த்தியதைப் புரிந்துகொண்டே நாம் செயற்படவேண்டும். இதனையே மக்கள் விரும்புகின்றார்கள். "குற்றம் பார்க்கில் சுற்றமில்லை" என்பது ஆன்றோர் வாக்கு. இந்த அடிப்படையில் தான் நான் இந்த ஈ.பி.ஆர். எல். எவ் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கின்றேன்.

### பிழை செய்வது மனித சுபாவம்

கடந்த காலத்தில் நாம் விட்ட தவறுகளை உணர்ந்தவர்களாக, கடந்த காலத்தில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டவர்களாக, ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை அடிப்படையில் நாம் பல கட்சிகளுடன் இணைந்து செயற்படவிருக்கின்றோம். எமது மக்களின் நீண்டகால அபிலாஷைகளைப் பாதிக்கும் வகையிலோ அல்லது கொள்கைகளுக்கு முரணாகவோ எம்மோடு சேர்ந்து பயணிப்பவர் எவராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு நானும் விதிவிலக்கல்ல. அமையவிருக்கும் கூட்டணியின் ஒழுக்க விதிகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பவை பற்றி நாம் விரிவாக ஆராய்ந்து விரைவில் முடிவுகளை எடுப்போம்.

கடந்த காலப் பிழைகளை நாம் தொடர்ந்தும் செய்யாதிருப்பதற்கு நாம் யாவரும் சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும். **Toerr is human to forgive is Divine** என்பார்கள். பிழை செய்வது மனித சுபாவம் மன்னித்தல் தெய்வசுபாவம் என்பார்கள். யார் பிழை செய்தோம் என்பது முக்கியமல்ல. யாரேனும் பிழைகள் செய்திருந்தால் அவற்றை மன்னித்து கொள்கைகள் அடிப்படையில் சேர்ந்து முன்னேறுவதே நாம் தமிழ் மக்களுக்கு செய்யக்கூடிய பலத்த சேவையாகும். இதனைத் தம்பி செய்தார். ஏன் எம்மால் முடியாது?

### கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நோக்கமில்லை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நோக்கம் எனக்கு இல்லை என்று பல தடவைகள் குறிப்பிட்டிருக்கின்றேன். எவருடனும் எமக்குத் தனிப்பட்ட குரோதமோ, பொறாமையோ, காழ்ப்புணர்வோ இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகலரையும் எனது உடன் பிறந்தோராகத் தான் இன்னமும் கருதுகின்றேன். எனினும் அவர்கள் இட்டுச் செல்லும்வழி தவறானது என்று கூற எமக்கு ஒரு கடப்பாடு உள்ளது. நாம் போகும் வழி தவறானது என்றால் அந்த வழியில் பயணிக்கவந்தவர்கள்எவருமே அதைச் சுட்டிக்காட்ட கடப்பாடு உடையவர்கள். கூட்டமைப்பு தற்போது செல்லும் பாதை எம்மை நாம் அழித்துக்கொள்வதற்கு வழி வகுக்கும் என்பதே எமது கணிப்பீடு. ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய செயற்பாடுகளில் உடன்பாடு இல்லாமல் தனிப்பட்ட ரீதியில் எவரும் எம்முடன்இணையவிரும்பினால் அவர்களை அரவணைக்க நாம் தயார் என்று நான் முன்னர் கூறியதை மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருவதற்குத் தலைகீழாக நின்று பாடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியின் ஊடாக மட்டும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுவிட முடியும் என்று நம்புகின்றதா? எமது மக்களின் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கோ, காணாமல் போனோர் சம்பந்தமாக விசாரணைகள் நடத்த வலியுறுத்தவோ, பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதற்கோ இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் வலியுறுத்தினால் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசிய கட்சியை விமர்சனம் செய்ய வாய்ப்பாக அது அமைந்து விடும் என்ற காரணத்துக்காகவே மௌனிகளாக இருக்க வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்றது.

இதுவா பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தைப் பாதுகாத்து தமிழ் மக்களுக்கு நாம் பெற்றுக்கொடுத்துள்ள நன்மை? இதற்காகவா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது?

### சமஷ்டி முறைமை மறைக்கப்பட்டுள்ளது

புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் பல ஆபத்துக்கள் பற்றி மூடி மறைக்கப்பட்டுள்ளன. பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுசமஷ்டி முறைமை மறுக்கப்பட்டுள்ளது. என்றென்றைக்கும் இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாக இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கு இணைப்புக்கு நாம் போராடி வரும் நிலையில் தமிழர் தாயகம் துண்டாடப்படுவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. அதாவது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த வட-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்ற பந்தி புதிய அரசியல் அமைப்பு வரைவில் இருந்து கபடத்தனமாக நீக்கப்பட்டு "அருகருகே உள்ள எந்த மாகாணங்கள் விரும்பின் இணைய முடியும்" என்ற வாசகம் உட்புகுத்தப்பட்டுள்ளது.

ஒருபுறம்மணலாறை ஊடறுத்து முல்லைத்தீவின் கரையை நோக்கி மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் விரைவுபடுத்தப்படுவதுடன் அத்துண்டை வருங்காலத்தில் வடமத்திய மாகாணத்துடன் இணைப்பதற்கும் முயற்சிகள் திரை மறைவில் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிய வருகின்றன. இதன் மூலம் வடக்கும் கிழக்கும் நிலத்தொடர்பற்ற மாகாணங்களாக எதிர்காலத்தில் மாற்றப்பட்டு புதிய அரசியல் அமைப்பின்படி எக்காலத்திலும் அவற்றின் இணைப்பு சாத்தியமற்றது என்ற நிலைமை உருவாக்கப்படவிருக்கின்றது. அத்துடன் அருகருகே உள்ள மாகாணங்கள் இணைக்கப்படலாம் என்பதனூடாக வடமத்திய, மத்திய, தென் மாகாணங்களுடன் கிழக்கை இணைக்கும் வாய்ப்பும் இப்புதிய அரசியல் அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆபத்துக்களே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் "சாணக்கிய அரசியலினால்" உத்தேச அரசியல்அமைப்பினூடாக எமக்கு கிடைக்கப் போகின்றன.

புதிய அரசியலமைப்பு என்பதே ஒரு நாடகம். தீர்வுக்கான முயற்சி என்ற இந்த நாடகத்தின் மூலம், எமது அடிப்படைக் கோட்பாடுகளை எம்மைக் கைவிடச் செய்வதன் மூலம், தீர்வே வேண்டியதில்லை என்ற ஒரு நிலையினை உருவாக்குவதே இந்த தீர்வு முயற்சியின் நோக்கமாக இருக்கிறது. அதாவது எமது அடிப்படைகளைப் புறக்கணித்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த புதிய அரசியல் யாப்புக்கு ஒப்புதல் கொடுத்துள்ளது. சமஷ்டி வேண்டாம் வடகிழக்கு இணைப்பு வேண்டாம், பௌத்தத்திற்கு முதலிடம் கொடுக்கலாம், சுயாட்சி தேவையில்லை என்று நாம்கூறுவதாக இருந்தால்பின் வேறெந்தத் தீர்வை நோக்கி நாம் பயணிக்கின்றோம்? மாகாண சபைகளுக்கு ஆளுநரிடம் இருந்து சில அதிகாரங்களை வழங்குவதற்காகவா?

இந்த நாடகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பாத்திரம் ஏற்றுள்ளதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு விரைவில் ஏதாவது கிடைக்க வேண்டும் தமது அரசியலைப் பாதுகாக்க. அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில்அவர்களுக்குக்கவலை இல்லை போலத் தெரிகின்றது.

அரசாங்கங்களைப் புறக்கணித்து வெளியில் இருந்து எமக்கான தீர்வினைக் கொண்டு வரலாம் என்று நான் உபதேசம் செய்யவில்லை. ஆனால், எமக்கான ஒரு நியாயமான தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு அழுத்தங்கள், இந்தியா, ஐ. நா. மற்றும் சர்வதேச அமைப்புகளின் அழுத்தங்கள் அவசியம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கங்களுடன் நாம் முட்டி மோதிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் எமக்கு கிடைக்க வேண்டிய நியாயம், உரிமைகள் என்பவற்றுக்காகவும், அடக்கு முறைகளுக்கு எதிராகவும் நாம் தொடர்ந்து அரசியல் ரீதியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போராடவேண்டும்.

இவற்றுள் ஒன்று ஐ.நா மனித உரிமைகள் சபை. இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் முக்கியமானது. இதனை நாம் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தீர்மான நிறைவேற்றாமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை காப்பாற்றும் வகையில் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகத் தோன்றுகின்றது. அரசாங்கம் எதனையோ தருவார்கள் என்ற நப்பாசை அவர்களைக் கவ்வியுள்ளது.

ஆகவே, இந்த ஆபத்துக்களை நாம் உடனடியாக தடுக்கும்வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். எதிர்வரும் தேர்தல்களின் மூலம்இந்த ஆபத்துக்களை முறியடிக்கும் வகையில் எமது மக்களை நாம் தயார்படுத்த வேண்டும். இதற்காக ஒத்த கொள்கையுடைய அனைவரும் வேற்றுமைகளையும் கட்சிநலன்களையும் புறந்தள்ளி இணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்தக் கூட்டிணைவை சாத்தியம் இல்லாமல் செய்யும் வகையில் பல்வேறு சதி முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

எம்மை எமக்குள்ளேயே முட்டிமோதவைத்து பலவீனமடையச் செய்ய முயலுகின்றார்கள். ஊடகங்களையும் இதற்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதுபோல, கொள்கையின்பால் ஒன்றானவர்கள் ஒன்றுதிரண்டால் நாம் எமது இலக்கை அடையும் வழிகளை இலகுபடுத்திக்கொள்ளலாம். போகும் வழியில் எம்மவரே எமக்குக் குழி தோண்டும் பணியில் ஈடுபட்டால் எமது பயணம் தடைப்படும்.

எனவே அன்பார்ந்த உறுப்பினர்களே, பொது மக்களே! நாம்அனைவரும்எமதுபல்வேறு கடமைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு அரசியல் முன்னெடுப்புக்களில் முழுமையாக ஈடுபடுகின்றோம் என்றால் அது எம்மை வளப்படுத்துவதற்கோ அல்லது தேட்டங்களை தேடிக்கொள்வதற்காகவோ அல்ல. நான்,வேண்டுமெனில் வெளிநாடு சென்று சொகுசான வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். எமது மக்களின் நிலை கண்டே உங்களுடன் நின்று போராட முன்வந்துள்ளேன். இலங்கைக்குள் சகல உரிமைகளுடன் கூடிய தமது இனத்தைத் தாமே ஆளக் கூடிய சுயநிர்ணயஉரிமைகளைக்கொண்ட வடகிழக்கைச் சேர்ந்த ஒரு இனமாக தமிழ் இனம் வாழ வேண்டும். அதற்காக நாம் தொடர்ந்தும் பாடுபட வேண்டும்என்ற அவாவில் தான் நான் இன்றும் இங்கிருந்து போராடி வருகின்றேன். இதற்கு உங்கள் யாவரதும்ஆதரவு என்றும்கிடைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ராயுடு 'சரவெடி'... பாண்ட்யா 'அதிரடி'

# வெலிங்டனில் இந்தியா வெற்றிக்கொடி

வெலிங்டன் ஒருநாள் போட்டியில் அசத்திய இந்திய அணி, 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் அம்பதி ராயுடு, பாண்ட்யா மிரட்ட, தொடரை இந்தியா 4-1 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் நான்கு போட்டிகளின் முடிவில் இந்திய அணி 3-1 என, ஏற்கெனவே தொடரை கைப்பற்றி முன்னிலையில் இருந்தது. நேற்று, ஐந்தாவது போட்டி வெலிங்டனில் நடந்தது.

**முதல்முறை**

ஐந்தாவது ஒருநாள் போட்டியில் வென்ற இந்திய அணி, நியூசிலாந்து மண்ணில் முதல் முறையாக ஒரு தொடரை 4-1 எனக் கைப்பற்றியது. கடந்த 1967ல் முதன்முறையாக டெஸ்ட் தொடரில் பங்கேற்கச் சென்ற இந்திய அணி, இதுவரை எந்த ஒரு தொடரையும் இப்படி வென்றது கிடையாது. இதற்கு முன், அதிகபட்சமாக 3-1 என, தலா ஒரு டெஸ்ட் (1967), ஒருநாள் (2009) தொடர்களை வென்றிருந்தது.

**தோனி வருகை**

இந்திய 'லெவின்' அணியில் காயத்தில் இருந்து மீண்ட தோனி இடம்பிடித்தார். இதனால் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் நீக்கப்பட்டார். குல்தீப் யாதவ், கலீல் அகமட்டுக்கு பதிலாக தமிழக 'சகலதுறை வீரர்' விஜய் ஷங்கர், மொஹமட் ஷமி சேர்க்கப்பட்டனர். நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோகித் 'துடுப்பாட்டத்தை' தேர்வு செய்தார்.

**'ரொப் ஓர்டர்' சரிவு**

இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி மீண்டும் மோசமான ஆரம்பம் கொடுத்தது. மட் ஹென்றி பந்தில் ரோகித் (2) போல்டானார். போல்ட் 'வேகத்தில்' தவான் (6) வெளியேறினார். அடுத்து வந்த சுப்மன் கில் (7), ஹென்றியிடம் சரணடைந்தார். அனுபவ வீரர் தோனி (1), போல்ட் பந்தில் போல்டானார். இந்திய அணி 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.



வெற்றிக் கிண்ணத்துடன் இந்திய வீரர்கள்

**ராயுடு அபாரம்**

பின் இணைந்த அம்பதி ராயுடு, விஜய் ஷங்கர் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. போல்ட் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி, தனது ஓட்டக் கணக்கை ஆரம்பித்தார் ஷங்கர். மறுமுனையில் அசத்திய அம் பதி ராயுடு, கிராண்ட்ஹோம் வீசிய 23ஆவது ஓவரில் தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 98 ஓட்டங்கள் சேர்த்த போது ஷங்கர் (45) 'ரன் அவுட்' ஆனார்.

கிராண்ட்ஹோம் வீசிய 35ஆவது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விரட்டிய ராயுடு, அரைசதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய இவர், மன்ரோ வீசிய 40வது ஓவரில் 2 சிக்சர்களை பறக்கவிட்டார். அபாரமாக ஆடிய ராயுடு, 90 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஹென்றி பந்தில் ஆட்டமிழந்தார்.

**பாண்ட்யா விளாசல்**

கேதர் ஜாதவ் (34) ஓரளவு கைகொடுத்தார். டொட் அஸ்லே வீசிய 47வது ஓவரில் 'ஹட்ரிக்' சிக்சர் விளாசிய, 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா, நீஷம் வீசிய 49வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விரட்டினார். இவர், 22 பந்தில் 45 ஓட்., (5 சிக்சர்) எடுத்து 'பெவிலியன்' திரும்பினார். புவனேஷ்வர் குமார் (6), மொஹமட் ஷமி (1) நிலைக்கவில்லை.

49.5 ஓவர்களில், இந்தியா 252 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது.

**ஷமி அசத்தல்**

பின் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு மொஹமட் ஷமி தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' ஹென்றி நிக்கோல்ஸ் (8), கொலின் மன்ரோ (24) ஆட்டமிழந்தனர். ஹர்திக் பாண் ட்யா பந்தில் ரொஸ்ரெய்லர் (1) நடையை கட்டினார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த அணித் தலைவர் கேன் வில்லியம்சன் (39), கேதர் ஜாதவ் 'சுழலில்' சிக்கினார். அடுத்து வந்த லைதாம் (37), கொலின் டி கிராண்ட்ஹோம் (11), சகால் பந்தில் ஆட்டமிழந்தனர்.

**நீஷம் ஆறுதல்**

ஷமி வீசிய 35வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த ஜேம்ஸ் நீஷம், புவனேஷ்வர் வீசிய 36வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். இவர், 44 ஓட்டங்கள் (32 பந்து) எடுத்திருந்தபோது தோனியின் சாமர்த்தியமான களத்தடுப்பில் 'ரன் அவுட்' ஆனார். டொட் அஸ்லே (10), மிட்சல் சான்ட்னர் (22), போல்ட் (1) நிலைக்கவில்லை.

நியூசிலாந்து அணி 44.1 ஓவர்களில், சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. மட் ஹென்றி (17) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# மே.தீவுகள் புத்தெழுச்சி

## இங்கிலாந்து இமாலய வீழ்ச்சி

### 7 ஆண்டுகளின் பின் தொடர் வெற்றி



இங்கிலாந்து அணியை தனது பந்துவீச்சால் நிலைகுலையச் செய்த மே.தீவுகளின் ரோச்

ஹோல்டர், ரோச், ஜோசப்பின் புத்தெழுச்சியான பந்துவீச்சு கைகொடுக்க இங்கிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்டில் 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி, 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

மே.தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத் தொடரின் முதல் போட்டியில் மே.தீவுகள் வென்றிருந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் நோர்த் சவுண்ட் (அன்டிகுவா) நகரில் நடைபெற்றது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 187, மே.தீவுகள் 306 ஓட்டங்கள் எடுத்தன. பின், 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி, மே.தீவுகளின் பந்துவீச்சில் மீண்டும் திணறியது. ஹோல்டர் 'வேகத்தில்' ரோரி பேர்ன்ஸ் (16), ஜானி பேர்ஸ்டோவ் (14), ஜொஸ் பட்லர் (24) வெளியேறினர். ஜோசப் பந்தில் ஜோ டென்லி (17), அணித் தலைவர் ஜோ ரூட் (7) ஆட்டமிழந்தனர்.

கீமர் ரோச் 'வேகத்தில்' பென் ஸ்ரோக்ஸ் (11), மொயீன் அலி (4), பென் போக்ஸ் (13), ஸ்ரூவேர்ட் பிரோட் (0) 'பெவிலியன்' திரும்பினர். ஹோல்டர் பந்தில் ஜேம்ஸ் அண்டர்சன் 'டக் அவுட்' ஆனார்.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 132 ஓட்டங்களுக்கு சுருண்டது. சாம் குர்ரான் (13) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் ரோச், ஹோல்டர் தலா 4, ஜோசப் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**எளிய இலக்கு**

பின், 14 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த மே.தீவுகள் அணி, 2.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கிரெய்க் பிராத்வைட் (5), ஜோன் கம்பெல் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனையடுத்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை மே.தீவுகள் அணி 2-0 எனக் கைப்பற்றி முன்னிலை பெற்றது.

# ஆஸி., பிடியில் இலங்கை

இலங்கைக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் உஸ்மான் கவாஜா சதம் கடந்து கைகொடுக்க, 2ஆவது இன்னிங்சில் 196/3 ஓட்டங்களுக்கு ஆட்டத்தை இடை நிறுத்திய அவுஸ்திரேலியா, 515 ஓட்டங்களால் வலுவான முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியா - இலங்கை அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் கான்பெராவில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 534/5 (டிக்ளேர்) ஓட்டங்கள் குவித்தது. இரண்டாம் நாள் முடிவில், முதல் இன்னிங்சில் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குசல் பெரேரா (11), தனஞ்செய (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஸ்டார்க் அசத்தல்**

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் ரிச்சர்ட்சன் வீசிய 'பவுன்சர்' பந்து தாக்கியதில் நிலைகுலைந்த குசல் பெரேரா (29) 'ரிட்டயர்ட் ஹேர்ட்' ஆனார். ஸ்டார்க் 'வேகத்தில்' தனஞ்செய டி சில்வா (25) ஆட்டமிழந்தார். இரண்டாம் நாளில் கம்மின்ஸ் வீசிய 'பவுன்சர்' பந்து தாக்கியதில் இருந்து மீண்டு வந்த திமுத் கருணாரத்ன (59) அரைச்சதம் கடந்தார். லயன் 'சுழலில்' சமிக கருணாரத்ன (0) சிக்கினார். நிரோஷன் டிக்வெல (25) ஆறுதல் கொடுத்தார். தொடர்ந்து மிரட்டிய ஸ்டார்க் பந்தில் டில்ருவான் பெரேரா (10), பெர்ணான்டோ (0) ஆட்டமிழந்தனர்.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ஸ்டார்க் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**கவாஜா கலக்கல்**

பின், 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணிக்கு மார்கஸ் ஹரிஸ் (14), ஜோ பேர்ன்ஸ் (9) ஏமாற்றினர். மார்னஸ் (4) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய உஸ்மான் கவாஜா சதம் கடந்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த டிராவிஸ் ஹெட்



சதமடித்த மகிழ்வில் ஆஸியின் கவாஜா

அரைச்சதமடித்தார்.

இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. கவாஜா (101), ஹெட் (59) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் கசன் ரஜிதா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**கடின இலக்கு**

516 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்களை எடுத்திருந்தது. கருணா ரத்ன (8), திரிமான்னே (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்னும் 2 நாள் மீதமுள்ள நிலையில் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களின் பிடியில் இருந்து இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் தப்புவது கடினம்.




ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய மகாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் கலாபூஷணம் க.அருந்தவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நீதியரசருமான சி. வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், அக் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உப தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரட்ணம், கட்சியின் பொருளாரும் மன்னார் நகர சபையின் உறுப்பினருமான சம்பூரணம் இரட்ணசிங்கம் உட்பட கட்சியின் அமைப்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். மகாநாட்டின் ஆரம்பத்தில் கடந்த 40 வருடமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கடந்து வந்த பாதை தொடர்பான காணொலி காட்சிப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கட்சியின் செயற்பாடுகள், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன. (படங்கள்:-பொ.சோபிகா)

### தமிழ் மக்களின் நலன்கருதி

# தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றிணைய வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல். எப். தலைவர் சுரேஷ் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் நலன் கருதி சகல தமிழ்த் தேசிய சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், வரட்டுத்தனமான வாதங்களும் தூரநோக்கற்ற சிந்தனைகளும் தமிழ் மக்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவராது எனவும் தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய மகாநாடு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இலங்கையின் தென்பகுதியில் சிங்கள பௌத்த பேரினவாதம் உச்சமடைந்துள்ளது.

புதிய அரசியல் சாசனம் ஒன்று உருவாக்கப்படும்.

அதில் வடக்கு-கிழக்கு இணைந்திருக்கும்" தமிழ் மக்களின் இறையாண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு" சமஷ்டி முறைமையிலான ஆட்சி அதிகாரமுறை இருக்கும்" குறைந்த பட்சம் வடக்கு-கிழக்கு மாகாணங்களாவது மதச்சார்பற்ற மாகாணங்களாக இருக்கும் என்று தமிழ் மக்களுக்குச் சொல்லப்பட்டு வந்தது.

மக்கள் அதனை நம்பி அதற்கான ஆணையை வழங்கினர். ஆனால் இன்று அவை அனைத்தும் மறுதலிக்கப் பட்டுள்ளன.

இந்த சூழலில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண- கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய பிராந்திய மகாநாடு நடைபெற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராசி பலன்

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்:** எந்த காரியத்தையும் நிதானமாக செய்வது நல்லது, உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கௌரவக்குறைவான நாள்.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | |
| புத | **இராசி பலன்**<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம் | | ராகு |
| சூரி, கேது, சந் | | | |
| சுக், சனி | குரு, | | |

04.02.2019
தை 21, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
அமாவாசை பின்னிரவு 3.03 மணிவரை
திருவோணம் பின்னிரவு 6.29 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை கூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு:** செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், பயணங்களினால் பலனுண்டு, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிபோட்டுவந்த கரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

# யாழில் அமைதிப்படையாக இராணுவம்

# தமிழ் மக்கள் உண்மையான சுதந்திரத்தை போருக்குப்பின் அனுபவித்து வருகின்றனர்

## கட்டளைத் தளபதி தர்ஷன சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

**போருக்குப் பின்னரான தற்போதைய அமைதியான சூழலில் தமிழ் மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர் என்று இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னரான அமைதியான சூழலில் இந்நாட்டு மக்கள் அனைவருமே இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர்.

எமது நாட்டில் இயல்பு சூழலுடன் கூடிய சுதந்திரத்தை மீட்டுக் கொடுத்ததில் இராணுவத்தின் பங்கும் பங்களிப்பும் கனகாத்திரமானவையாகும்.

எமது நாட்டை சுமார் முப்பது ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஆட்டிப் படைத்த பிரிவினைவாதத்தை நாம் வேரறுத்ததன் மூலமாகவே தமிழர்கள் அடங்கலாக இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் புதிய சுதந்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக இத்தருணத்தில் சொல்ல வேண்டியவனாக உள்ளேன்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்கு பின்னர் எமது தாய் நாடு அமைதிப் பூங்காவாக மாறியுள்ளது.

இன்று அமைதிப்படையாகவே நாம் யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டு உள்ளோம்.

யாழ். மாவட்டத்தையும் இம்மாவட்டத்தின் மக்களையும் அனைத்து வகைகளிலும் நிம்மதியாக வாழ வைப்பதற்கான முன்னெடுப்புக்களை முடுக்கி விட்டு உள்ளோம்.

இராணுவத்தின் மனித நேய வேலைத் திட்டங்கள் இம்மக்களுக்கு வரப்பிரசாதங்களாக அமையப் பெற்றுள்ளன.

இராணுவம் அடங்கலாக இந்நாட்டு மக்கள் அனைவரும் ஏராளமான விலைகளை கொடுத்தே புதிய சுதந்திரத்தை மீட்டு எடுத்துள்ளோம் என்பதில் எந்த மாற்றமுமில்லை.

எனவே எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில் மீளக்கட்டியெழுப்பிய இந்த சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் உள்ளது.

எனவே ஒன்று பட்ட இலங்கைக்குள் எல்லா இன மக்களும் ஐக்கியம், சமாதானம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பேணியவர்களாக நிம்மதியாக வாழ வேண்டும் என்கிற நல்ல செய்தியை இலங்கையர்கள் ஒவ்வொருவரும் வருங்கால சந்ததியினருக்கு எடுத்து சொல்ல வேண்டி இருக்கின்றது.

இராணுவம் என்கிற வகையில் நாம் இந்த சுதந்திரத்தை கட்டிக் காப்பதில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

இந்த இடத்தில் புதிய சுதந்திரத்தை மீட்டுக்கொடுப்பதற்காக இன்னுயிர்களை தியாகம் செய்த பொதுமக்கள், இராணுவம் ஆகியோரை நன்றி அறிதலுடன் நான் நினைவு கூருகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வீதிக்கு பெயர் சூட்டுவதில் இருந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்தது

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வடவரணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள சிறு வீதி ஒன்றுக்கு பெயர் சூட்டுவது தொடர்பாக கிராம மக்கள் மத்தியில் நிலவிவந்த பிரச்சினை தவிசாளரின் தலையீடு காரணமாக முடிவுக்கு வந்துள்ளது.

அதாவது இக்கிராமத்தின் ஒரு சிறு வீதிக்கு ஒரு பிரிவினர் கிருஷ்ணா வீதியென பெயர் சூட்ட வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளரை சந்தித்து மகஜரும் கையளித்தனர்.

ஆனால் இதற்கு கிராமத்தில் வசிக்கும் இன்னொரு பிரிவினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு தவிசாளரிடம் முறைப்பாடும் செய்தனர்.

எனவே இருபிரிவினருடைய கோரிக்கையையும் கருத்தில் எடுத்துக் கொண்ட தவிசாளர் கிராமத்தில் கூட்டம் ஒன்றை நடத்தி அம் மக்களில் பெரும்பாலானோரின் ஆதரவு என்னவென்பதை அறிந்து முடிவெடுப்போம் எனக் கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வடவரணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மக்கள் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டது.

இதில் பிரதேச சபையின் உபதவிசாளர், செயலாளர் மற்றும் வட்டார உறுப்பினர், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு தமது கருத்தை தெரிவித்தனர்.

அதிலே அவர்கள் கிருஷ்ணா வீதி எனப்பெயர் சூட்டுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன் இது சுயநலம் சார்ந்தது எனவும் கருத்து வெளியிட்டனர். ஆகவே பொதுவான பெயர் சூட்டப்படல் வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். பெரும்பாலான மக்களின் கோரிக்கையை ஏற்று இந்த வீதிக்கு ஞான வைரவர் வீதி எனப் பெயர் சூட்டுவதாக பிரதேச சபையின் உப தவிசாளர் மற்றும் செயலாளர் தெரிவித்தனர்.

இதற்கு கிராம மக்கள் வரவேற்பை தெரிவித்துள்ளதுடன் இப்பிரச்சினைக்கு சுமுகமாக நல்லதொரு தீர்வினைப் பெற்றுத்தந்த சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர்.(இ-103)

## பட்டப்பகலில் வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் இருவர் நையப்புடைப்பு

### புங்கன்குளம் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்கன்குளம் வீதியிலுள்ள வீடொன்றிற்குள் நுழைந்த திருடர்கள் இருவரை மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை புங்கன்குளம் கனகர்கடைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுப் பட்டப் பகலில் வீட்டின் மதில் பாய்ந்து உட்புகுந்து செல்லும் போதே, அயலவர்கள் கண்டு இரு இளைஞர்களையும் மடக்கிப் பிடித்து நையப்புடைத்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(இ-101)




## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பொற்பதி)

யாழ்.செம்பியன்பற்று றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை அதிபர் பா.உதயசேகர் தலைமையில் பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.திரவியராசா, செம்பியன் பற்று சென் பிலிப்புநேரியார் ஆலய பங்குத்தந்தை க.அருள் நேசன் அடிகளாரும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் ஆ.சுரேஸ்குமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ. சிறி ரங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-64)

## பண்பாட்டுப் பேரவையின் நிர்வாக,மலர்குழு கூட்டம்

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகக் குழு மற்றும் மலர் குழுக்கூட்டம் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் நிர்வாகக் குழு மலர் குழு உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச கலாசார உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-134)

## அபிராமிப் பட்டர் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

மூளாய் ஆதிபராசக்தி அலங்கார நாயகி அம்மன் ஆலயத்தில் அபிராமிப் பட்டர் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

இந் நிகழ்வில் அபிராமிப்பட்டரும் அம்பாளும் என்ற தெய்வீகப் பேருரையை மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் நிகழ்த்துவார். (இ-10)

## குளங்களை ஆழமாக்கி மழைநீரை சேமியுங்கள்

### அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட குளங்கள் ஆழமாக்கப்பட்டமையால் மழை காலங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப் பகுதியில் 10 இற்கு மேற்பட்ட குளங்கள் உள்ளன. வனிவிக்குளம், சிவன் கோயில் குளம், கற்குழிக் குளம், பெருங்குளம், கண்டுவில் குளம் எனப் பல குளங்கள் சாவகச்சேரிப் பிரதேசத்தைச் சூழ்ந்து காணப்படுகின்றன.

மழை காலம் ஆரம்பித்தால் குளங்களுக்குள் நீரைத் தேக்கி வைக்க முடியாதவாறு காணப்படுவதாகவும் மழைநீர் குளத்தைச் சென்றடைவதற்கான வடிகால் அமைப்புக்களும் சீர்செய்யப்படவில்லை எனவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்துக்கான நிலத்தடி நீரின் அளவு குறைவடைந்து செல்லும் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் தமது பிரதேசத்தில் பெய்கின்ற மழை நீரானது கடலை நோக்கிச் செல்வதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளம் தொடர்பிலும் மக்கள் தொடர்பிலும் அக்கறையுடன் செயற்பட்டு குளத்தை ஆழமாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)



அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினால், "மக்களையும் மண்ணையும் காப்போம்" என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் 1000 சவுக்கு மரங்களை நடுகை செய்யும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான மரங்கள் நடப்பட்டன.

# சுதந்திரதினத்தை நிராகரிப்போம் சுதந்திரத்திற்காய் அணிதிரள்வோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

18ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களால் தமிழ்த் தேசத்தின் இறைமை முற்றாக பறித்தெடுக்கப்பட்டதால் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் ஆட்சியதிகாரத்தை இழந்து வெள்ளையர்களால் அடிமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு தமிழ் மக்களிடமிருந்து பறித்தெடுத்த இறைமையையும் ஆட்சியதிகாரத்தையும் வெள்ளையர்கள் 1948 ஆம் ஆண்டு இலங்கைத் தீவில் பெரும்பான்மையாக காணப்பட்ட பௌத்த பேரினவாதிகளிடம் சட்டபூர்வமாக கையளித்து விட்டுச் சென்றனர். அன்றிலிருந்து இலங்கைத் தீவின் ஆட்சிக்கட்டில் ஏறிய பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் கட்டமைப்புசார் இன அழிப்புச் செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்து வந்துள்ளனர்.

அந்த இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகப் போராட்டங்கள் வன்முறை வழியில் அடக்கப்பட்டன.

அதனால் தமிழர் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர். அந்த ஆயுதப்போராட்டம் இன அழிப்பு ஒன்றின் மூலம் 2009 மே மாதம் அழிக்கப்பட்டுள்ளது. இன அழிப்பு யுத்தத்தை நியாயப்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை.

உலகிலேயே மிகக் கொடிய சட்டமாக உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல் வேண்டுமென ஐ.நா.மனித உரிமைகள் பேரவையால் கடந்த 2015ஆம் ஆண்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளபோதும், அதற்கு இலங்கை அரசு இணங்கியுள்ளபோதும் இன்று வரை அந்தச் சட்டம் நீக்கப்படவில்லை.

அச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் கேட்பாரின்றி கைது செய்யப்படுவதும் சித்திரவதை செய்யப்படுவதும் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது கண்ணீர்ப்போராட்டம் வீதியோரம் 700 நாட்களை தாண்டியும் தொடர்கின்றது.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக சிறைகளுக்குள் வாடும் அப்பாவி இளைஞர்களின் விடுதலை கானல் நீராகிக் கொண்டிருக்கின்றது. இன அழிப்பில் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் குடும்பங்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. கடந்த 28 வருடங்களுக்கு முன்னர் சொந்த ஊரிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கானோர் இன்று வரை தமது வீடுகளுக்கோ, ஊருக்கோ திரும்ப அனுமதிக்கப்படவில்லை. அவர்களது நிலங்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளதுடன், தொல்லியல் திணைக்களத்தினாலும், வன இலாகாவினாலும் மேலும் அபிவிருத்தி என்ற பெயரில் பல அரச திணைக்களங்களாலும் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர்களின் வாழ்வை அழிக்கும் வகையில் திட்டமிட்டு போதைப் பழக்கத்திற்கு அடிமையாக்கும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் யுத்தம் முடிந்து 10 ஆண்டுகளாகியும் இலங்கை அரசானது தனது இராணுவ பொலிஸ் அதிகாரங்களையும், ஏனைய அரச் அதிகாரங்களையும் பயன்படுத்தி தமிழர்களை அச்சுறுத்தி அவர்கள் மீது சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்தை திணிக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது.

இவை அனைத்துக்கும் முடிவு கட்டப்படல் வேண்டும் என்ற நோக்குடன் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தை நிராகரித்து கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி, கறுப்புக் கொடிகளை கட்டி எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இவ்வாண்டும் இலங்கை சுதந்திர தினத்தை நிராகரித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனயீர்ப்பு போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழுமையான ஆதரவை தெரிவித்துக் கொள்கின்றது. இப்போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக பொது மக்கள், பொது அமைப்புக்களையும் பெருமளவில் அணிதிரண்டு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குற்றங்களை மறுத்தார் மகிந்தவின் மைத்துனர்

## அமெரிக்க நீதிமன்றில் வாதம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினருமான ஜாலிய விக்ரமசூரிய, தான் குற்றவாளி இல்லை என அமெரிக்க நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இலங்கைக்கான புதிய தூதரகக் கட்டடத்தைக் கொள்வனவு செய்ததில் பண மோசடி செய்தமை, குடிவரவு- குடியகல்வுத் திணைக்கள நடைமுறைகளை மீறியமை உட்பட ஜாலியவுக்கு எதிரான ஐந்து குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரங்கள் அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தற்பொழுது தலைமறைவாகியிருக்கும் ஜாலிய விக்ரமசூரிய கடந்த 29ஆம் திகதி அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இதன் வழக்கு விசாரணை நீதிபதி தான்யா எஸ். சுட்கான் முன்னிலையில் இடம்பெற்றபோது, வழக்கில் சட்டத்தரணிகளான சியா முஸ்தபா மற்றும் அரவிந்த். கே.லால் ஆகியோர் அமெரிக்க அரசாங்கத்தின் சார்பில் ஆஜராகினர்.

இவர்கள் விசாரணையின் போது குற்றவாளி இல்லை என்ற சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தனர். எனினும் வழக்கின் தீர்ப்பு இன்னும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, நிதி மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கும் ஜாலிய விக்ரம சூரியவை விடுதலை செய்து, அவரிடமிருந்து ஏனைய மோசடிகள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதுபற்றி இடம்பெற்ற மின்னஞ்சல் பரிமாற்றம் தொடர்பிலும் செய்திகள் வெளியாகியிருந்தன.

"இந்த விடயம் தொடர்பாக அவர் சிறைக்குச் செல்ல மாட்டார்" என அவரது சட்டத்தரணிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# கலாசார மண்டபத்தை திறந்து மக்களிடம் கையளியுங்கள்

## ஆளுநருக்கு மகஜர்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆத்தியடியில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மண்டபத்தை உடனடியாக திறந்து அப்பகுதி மக்களிடம் கையளிக்குமாறு வடமாகாண ஆளுநருக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

வடமாகாண கலாசார அமைச்சால் பருத்தித்துறை நகரசபையின் தம்பசிட்டி வட்டார எல்லைக்குள் ஆத்தியடி எனும் இடத்தில் இரண்டு கோடி ரூபாய் செலவில் இந்த கலாசார மண்டபம் அமைக்கப்பட்டது.

நீண்டகாலமாக கட்டட வேலைகளை முடிக்காமலும், கலாசார மண்டபத்தை திறந்து வைப்பதிலும் அரச அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் அக்கறையற்று இருப்பதால் ஆளுநராகிய உங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம் என ஆளுநருக்கு அனுப்பப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

# இந்த ஆண்டின் இறுதிக்குள் இலங்கையில் தானியக்க புகையிரத ரிக்கெற் முறை

(கொழும்பு)

இந்த ஆண்டின் இறுதிக்குள் இலங்கையில் ஒரு தானியக்க புகையிரத ரிக்கெற் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் எம். டி.ஜே.டி.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியில் அதற்கான திட்டத்தை அமுல்படுத்த தாம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களம் இந்த திட்டத்திற்கான பல ஒப்பந்தங்களை பெற்றுள்ளதாகவும், இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டத்தின் கடன் வழங்குநர்களின் அங்கீகாரம் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது இந்தத் திட்டத்திற்காக நான்கு முன்மொழிவுகளை பெற்றுள்ளதாக குறிப்பிட்ட அவர், அவற்றை மதிப்பீடு செய்து ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பின்னர் அவர்கள் அதை சரி பார்த்து ஒப்புக்கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர் இந்தத் திட்டம், எந்த செலவுகளும் இல்லாமல் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒப்பந்தத்தில் திருத்தம்; அதிருப்தியில் சிங்கப்பூர்

(சிங்கப்பூர்)

இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கிடையிலான பொருளாதாரம் - தொழில்நுட்ப சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை திருத்தத்திற்கு உட்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததற்கு சிங்கப்பூர் அரசாங்கம் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் சில விடயங்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் திடீர் அறிவிப்பு குறித்து அதிருப்தியடைவதாக ஒப்பந்தத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கு சிங்கப்பூர் இராஜதந்திரிகள் அறிவித்துள்ளனர்.

எனினும் அரசாங்கத்தின் உயர்மட்ட குழு நாளைமறுதினம் புதன்கிழமை சிங்கப்பூருக்குச் செல்ல உள்ளது. இதன்போது இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கிடையிலான பொருளாதார தொழில்நுட்ப சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை முழுமையாக முன்னெடுக்க ஏற்பட்டுள்ள த்டைகள் குறித்து கவனம் செலுத்தி இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)




யாழ். கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. (படங்கள்:-மகாலிங்கம்)



யாழ்.நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன்,சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:-கிஷோர்)


# தை அமாவாசையும் அபிராமிப்பட்டரும்

இறைவன் அருள் விளையாடல் செய்து வீரச் செயல்கள் நிகழ்த்திய அட்ட வீரட்டானங்களுள் திருக்கடவூரும் ஒன்று. மார்க்கண்டேயரைக் காக்க, காலனைக் காலால் உதைத்த சிறி அமிர்த கடேசப்பெருமாள் இங்கு யமனைத் தண்டித்து அருளிய கோலத்தில் உற்சவ மூர்த்தியாக தெற்கு முக கால சம்ஹாரமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இம் மூர்த்திக்கு எதிரில் காலனும் எருமை ஊர்தியுடன் ஆண்டவன் அருளை வேண்டிய வண்ணம் இருக்கிறார்.



குங்குலியக் கலய நாயனாரும், காரி நாயனாரும் திரு அவதாரம் செய்த திருக்கடவூரில் இறைவனைச் சைவ சமயாச்சாரியர்கள் மூவர் பாடியுள்ளனர். இங்கு கோவில் கொண்டருளிய அன்னை ஸ்ரீ அபிராமி அம்மையின் அருள் பெற்ற அபிராமிப்பட்டர் திருக்கடவூரில் அந்தணர் மரபில் அவதரித்தார். அபிராமியின் மேல் அளவு கடந்த பக்தி கொண்டு அவள் நினைவால் யோகத்தில் திளைத்து ஒளிமயமான அவளுருவை அகத்தில் கண்டு ஆனந்திக்கும் நற்பேறு பெற்று விளங்கினார். இறை ஆனந்தத்தில் திளைத்து புற உலகை மறந்த அவரைப் பித்தன் என்று சிலர் இகழ்ந்தனர்.

தை அமாவாசையன்று கடலாட வந்த தஞ்சையின் சரபோஜி மன்னன் அபிராமியை வணங்க ஆலயம் புகுந்தான். அவனிடம் அபிராமிப் பட்டரைப்பற்றி சிலர் இழித்துக் கூறினர்.



அவரது உண்மைநிலையை அறிய அவரை அணுகிய அரசன் இன்று என்ன திதி? என்று கேட்டான். அம்பிகையின் திருக் கோல ஒளி வெள்ளத்தில் திளைத்திருந்த அபிராமிப் பட்டர் அரை குறையாக விழித்து இன்று பௌர்ணமி என்று கூறினார்.

முழு விழிப்படைந்த பின் நடந்ததை உணர்ந்த அபிராமிப் பட்டர் இப்பிழையின்றி அம்பிகையே காக்க வேண்டும் என்று அரி கண்டம் பாடத் தொடங்கினார். அம்பிகையின் சந்நிதியில் குழிவெட்டி அதில் நெருப்பை வளர்த்து அதற்கு மேல் நூறு கயிறுகளால் ஆன ஓர் பலகையை தொங்க விட்டு அதில் மேல் அமர்ந்து உதிக்கின்ற செங்கதிர் என்று ஆரம்பித்து ஒவ்வொரு பாடல் இறுதியிலும் அம்பிகையின் திருக்காட்சிப் பெருமை காரணமாக ஒவ்வொரு கயிறாக அறுத்துக் கொண்டே வந்தார்.

விழிக்கே அருளுண்டு என்ற 79 ஆவது பாடல் முடிந்தபோது அபிராமி அம்பிகைஅவருக்குகாட்சிகொடுத்தருளி தனது திருத்தோடு ஒன்றை கழற்றி வான மண்டலத்தில் வீச அது சந்திரனைப் போல் சுடர் வீசியது.

அன்பனே! நீ மன்னனிடம் கூறிய சொல் மெய்யாகும் படி செய்து விட்டோம். இந்த நூலைத் தொடர்ந்து பாடி முடிப்பாயாக. இதனைப் பாராயணம் செய்பவர்கள் நம் அருளை அடைவார்கள் என்று கூறி மறைந்தருளினாள். திருத்தோட்டின் ஒளி கண்டு அமாவாசை அன்று பௌர்ணமியா என்று அதிசயித்த சரபோஜி மன்னர் உண்மை தெரிந்து அபிராமிப் பட்டரை வணங்கி அவருக்கு பெரும் மானியமும் வழங்கினார்.

79 ஆவது பாடல் விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ் வழி கிடைக்கப் பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கய வர் தம் மோடென்ன கூட்டணியே.



யாழ். கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன், சித்த ஆயுள்வேத வைத்தியரும் பழைய மாணவியுமான திருமதி பூபதீஸ்வரி இரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினரும் புளொட் முக்கியஸ்தருமான இராசேந்திரம் செல்வராசா (நீர்வேலி செல்வம்), வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஸ்டெப்ஸ் கல்வி நிறுவனத்தின் பயிற்றுநரான திருமதி ரேணுகா பேரின்பமூர்த்தி ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். (படங்கள்:-கிஷோர்)

## அபிராமி அன்னையின் கருணைவிழா

(சாவகச்சேரி)

கொடிகாமம் தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தை அமாவாசை தினத்தில் அபிராமி அன்னை யின் கருணைவிழா இடம் பெறும்.

கலைஞானி கே.ரீ.குமரநாதன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவப்பெரியாரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய கணபதி துரைசிங்கம் கலந்து சிறப்பிக்க சைவப்புல்வர் இரா.ஜீவன்பிரானின் "வஞ்சமில்லா இனந்தரும்" எனும் தொனிப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் அறநெறிப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நூறு கயிறுகளிலாலான ஊஞ்சலில் அக்கினி குண்டத்தின் மேல் அபிராமிப் பட்டர் அமர்ந்து விளங்க அபிராமி அந்தாதி முற்றோதலும் இடம்பெறும். (இ-29)

## போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட ஆறு பெண்கள் உட்பட 89 பேர் கைது

(கொழும்பு)

ஹிங் குராங் கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டிருந்த 6 பெண்கள் உட்பட 89 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளத்தினூடாக விருந்தகம் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய கடந்த சில நாட்களாக போதைப் பொருளை தடுப்பதற்கான நடவடிக்கைகள் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (இ-7)



யாழ்.சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 29 ஆம் திகதி சென்.ஜேம்ஸ் விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.கலியுகன் தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன் பரிசில்களையும் வழங்கினார்.சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை ஜஸ்ரின் அடிகளாரும் கலந்து கொண்டார். (படங்கள் :-குருநகர் செய்தியாளர்)

## புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப் போவதில்லை

### சந்திரிகா தெரிவிப்பு

(கம்பஹா)

புதிய அரசியல் கட்சி ஒன்றை தாம் ஒருபோதும் ஆரம்பிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சிலரும் இணைந்து புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இது தொடர்பாக நேற்று கம்பஹா பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, "அழிந்து போயுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாங்கள் கட்டியெழுப்புவோம்.

அதனை விடுத்து புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதில்லை. நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருக்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினம் இன்று

# பெரும்பாமை கொண்டாட்டம்; சிறுபான்மை ஏக்கம்

ஆங்கிலேயரிடமிருந்து நாட்டை மீட்பதற்காக இலங்கையர் அனைவரும் இன, மத, மொழி பேதமின்றி முயற்சி செய்துள்ளனர். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் இணைந்து பெற்ற சுதந்திரத்தை, தலைமுறை தலைமுறையாக நாம் காத்து வந்த ஒற்றுமையை கடந்த சில காலமாக பேணிப் பாதுகாக்க முடியாமல் போய்விட்டது. இது கவலைக்குரிய விடயமாகும். எமது தாய்த்திரு நாடான இலங்கை அந்நியர்களிடமிருந்து சுதந்திரமடைந்து பெப்ரவரி நான்காம் திகதியான இன்று 71 ஆவது ஆண்டாகும்.

இலங்கையின் சுதந்திரத்தின் வயது 71 வருடங்கள் ஆகும்.



சிறுபான்மையினரின் சுதந்திரத்தின் வயது.....?. ஒருநாட்டின் சகல இன மக்களும் ஒரேமாதிரியான அந்தஸ்து, உரிமை, சலுகை சமமாக அனுபவிக்க கிடைக்கிறதோ அதுவே ஒரு பரிபூரண சுதந்திரமாகும்.

எமது நாட்டில் பெரும்பான்மையினர் அனுபவிக்கும் அந்தஸ்து, உரிமை, சலுகை, வேலை வாய்ப்பு சிறுபான்மையினரான தமிழர், முஸ்லிம் ஆகிய எங்களுக்கும் சமமாக கிடைப்பதில்லை.

எப்பொழுது எமது நாட்டில் சகல இன மக்களுக்கும் ஒரே மாதிரியான சமமான பிரஜாவுரிமை கிடைக்கிறதோ அதுவே பரிபூரண சுதந்திரமாகும். புதிய அரசியல் அமைப்பின் மூலம் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே சிறுபான்மையினரின் எதிர்பார்ப்பு என்றால் மிகையாகாது.

ஒரு நாட்டின் சுதந்திரமானது இன, மொழி, மத வேறுபாடுகள் இன்றி உணவிலும், கல்வியிலும், அரசியலிலும், வேலைவாய்ப்பிலும், பெண் விடுதலையிலும் கருத்து வேறுபாடுகள் அற்று ஆண், பெண் என்ற இரு சாராருக்கும் சமஅளவில் கிடைக்க வேண்டிய சமத்துவ உரிமை எப்பொழுது ஒரு நாட்டில் சீராக, நிலையாக நிலவுமோ அதுவே ஒரு நாட்டின் சுதந்திரம் ஆகும்.

சுதந்திரமடைந்த இலங்கை நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என அனைத்து இன மக்களுக்கும் சம அளவிலான உரிமைகள் வழாங்கப்பட வேண்டும்.

ஒருவர் தன்னிடமுள்ள கைத்தடியை தனது விருப்பம் போல சுழற்ற முடியும். அது அவரின் உரிமை. அந்த உரிமையானது, அடுத்தவரின் மூக்கின் நுனியோடு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

அந்தவகையில் சுதந்திரமடைந்த ஒரு நாட்டில் எந்தவொரு தனி மனிதனுக்கும் அல்லது ஒரு சமூகத்திற்கும் தாங்கள் விரும்பிய ஒரு மதத்தை சரி காண்பதற்கும் அதனை பின்பற்றுவதற்கும் பூரண அனுமதியுண்டு.

அதே போல தொழில், கலாசாரம், மொழி போன்ற அனைத்து விதமான செயற்பாடுகளையும் தங்களின் விருப்பம் போல மேற்கொள்வதற்கு எந்தவொரு தடையும் கிடையாது.

மாறாக ஒருவரின் விருப்பு வெறுப்புக்களை தடை செய்வதோ அல்லது அதனை முறையற்ற வகையில் விமர்சிப்பதோ அப்பட்டமான அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார, கொள்கை சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது சுதந்திர நாடுகளின் தத்துவங்களில் ஒன்றாகும். அரசு இந்த விடயத்தில் பொறுப்புடன் கூடிய கவனம் செலுத்தி பெறப்பட்ட சுதந்திரத்தை ஆரோக்கியமான முழுமையான ஒரு சுதந்திரமாக ஆக்க வேண்டும் என்பதே சிறுபான்மையினராகிய தமிழர், முஸ்லிம்களது எதிர்பார்ப்பும் அபிலாஷையும் ஆகும்.

எமது நாடு உலக வரைபடத்தில் மிகச் சிறியதாகத் தென்பட்ட போதிலும் சுமார் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். எமது நாடு ஆரம்ப காலந்தொட்டே முற்றுமுழுதாக மேற்கத்தேய வாதிகளின் ஆதிக்கத்துக்குள்ளேயே அகப்பட்டிருந்தது.

1505 ஆம் ஆண்டு தொடக்கம், சுதந்திரம் அடைந்த வருடமான 1948 வரைக்குமுள்ள காலப்பகுதியை போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள் என மேலைநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்களுக்கு பெயர் போன ஒரு தீவாகவே இலங்கைத் தீவு திகழ்ந்துள்ளது.

இதற்கு மிகவும் பிரதான காரணியாக அமைந்தது எமது தாய் நாட்டில் காணப்படுகின்ற இயற்கை வளங்களாகும்.

இந்திய நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து ஒரு வருட இடைவெளியில் கிடைத்தவரை எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு இனித் தேவையில்லை என்ற நிலையிலேயே ஆங்கிலேயர்கள் 1815 ஆம் ஆண்டிலிருந்து பிரிட்டனின் காலனித்துவ நாடாக விளங்கிய இலங்கையை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

எமது நாடான இலங்கை இந்தியாவைப் போன்று போர்க்கொடி தூக்கி சுதந்திரத்தை அடையவில்லை. இலங்கைக்கு சுதந்திரம் இலவசமாக கிடைத்தது. நம் நாட்டு மக்கள் சமாதானமாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு உண்மை நிலையை விளக்கி சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதில் ஒரு வகையில் சாதனை படைத்தார்கள். எமதுநாட்டின் சுதந்திரமானது இலவசமாகவும் அமைதியான முறையிலும் கிடைத்த சுதந்திரமாகும்.

இலங்கை 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட போது எமது நாட்டின் முதல் பிரதம மந்திரியாக டி.எஸ். சேனநாயக்க ஆட்சியில் அமர்த்தப்பட்டார்.

டி. எஸ். சேனநயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன, சேர்.பொன் இராமநாதன், சேர்.பொன் அருணாசலம், ரி. பி. ஜாயா, சேர் ராசிக் பரீட் ஆகியோர் ஒன்றாக இணைந்து சமாதானமாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குஉண்மைநிலையை விளக்கி சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதில் ஒரு வகையில் சாதனை படைத்தார்கள்.

எந்தவொரு சமூகமும் அதன் மத வழிபாடுகள், வர்த்தக நடவடிக்கைகள், குடியுரிமைகள் போன்றவற்றை தங்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் அமைத்துக் கொள்வதற்கு தாராளமான வழிவகைகளை அமைத்துக் கொடுப்பது ஒரு இறைமையுள்ள அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

அல்ஹாஜ் எம். எப். எம். இக்பால் (ஜே.பி)

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கைக்கு வருகை









(கொழும்பு)

71ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொள்ளும் முகமாக மாலைதீவு ஜனாதிபதி நேற்று இலங்கைக்கு வந்தடைந்தார். மாலைதீவின் ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிஹ்கை, விமான நிலையத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்றார்.

பாரம்பரிய முறைப்படி மாலை அணிவிக்கப்பட்டு அவருக்கு வரவேற்களிக்கப்பட்டது. அதன்பின்னர், அங்கிருந்த நினைவுப் புத்தகத்தில் அவர் கையெழுத்திட்டார்.

இலங்கையின் 71ஆவது தேசிய சுதந்திரதின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

இதேவேளை நாளை பிற்பகல் 2.30 மணியளவில், இலங்கை வர்த்தக சம்மேளனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்வொன்றிலும் மாலைதீவு ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)





யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றது.

# மலைக்குன்றில் கல் உடைப்பதற்கு எதிர்ப்பு

## யேசுபுரம் மக்கள் உணவு ஒறுப்புப் போராட்டம்

(குருமன்காடு)

வவுனியா பெரியகோமரசங்குளம், யேசுபுரம் பகுதியிலுள்ள சிறிய மலைக் குன்றில் கல்லுடைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மலையின் அரு கில் வசிக்கின்ற பொதுமக்கள் குறித்த பகுதியில் குடில் ஒன்றை அமைத்து தொடர் உணவு ஒறுப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.





இதன்போது கருத்து தெரிவித்த அப்பகுதி மக்கள்,

இப் பிரதேசத்தில் கல் உடைப்பதனால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற நிலை ஒன்று உருவாகியுள்ளது. அருகில் உள்ள பொது மக்களின் வீடுகளில் வெடிப்புகள் உரு வாகின்றன. கல்லுடைப்பதற்கு பயன்படும் வெடிபொருளில் இருந்து பரவுகின்ற நச்சு தன்மையானது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, சுவாசிக்கும் போது அவர்களுக்கு அசௌ கரியங்களை கொடுப்பதுடன் சுவாசம்தொடர்பான நோய்களும் ஏற்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் கடந்த டிசம்பர் மாதம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன் னெடுத்திருந்ததுடன், அரச அதிபருக்கும் தெரியப்படுத்தியிருந்தனர். அதற்கமைய குறித்த பகுதியில் கல் உடைப்பதால் பாதிப்புகள் ஏற்படுகின்றதா என்று அதிகாரிகள் குழு ஆய்வு செய்திருந்தது. அதன் பின்னர் கல் உடைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த ஆய்வு நடவடிக்கையின் போது சிறிய அளவிலான வெடிபொருட்களே பயன்படுத்தப்பட்டதாகவும், ஆனால் தற்போது மிகவும் சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் பயன்படுத்தப்படுவதாகவும் குற்றம் சாட்டும் கிராம வாசிகள், குறித்த மலையில் கல்லுடைக்கும் பணிக்கு முற்றுமுழுதாக தடை விதிக்கப்படவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் உள்ளிட்ட பலர் சென்று பார்வையிட்டு கலந்துரையாடியிருந்தனர். (2-250)

## நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்படாமையால் கிராமத்திற்கு மத்தியில் வீதியில் உலர விடுகின்றோம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மருதங்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் நெல்உலர விடுவதற்கான தளங்கள் போதியளவு இன்மையால் வீதிகளில்நெல்லை உலர விடவேண்டிய நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, புத்துவெட்டுவான் கிராமத்தில் ஒரு நெல் உலரவிடும் தளமும் ஐயன்கன்குளம் கிராமத்தில் ஒரு நெல் உலர விடும் தளமும் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பிரதேசங்களில் காலபோகத்திலும் சிறுபோகத்திலும் சகல விவசாயிகளும் ஒரே நேரத்தில் அறுவடைகள் ஆரம்பிக்கப்படுவதனால் அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக உலர வைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. தமது கிராமங்கள் விவசாயக்கிராமங்களாக இருப்பதனால் தற்போது இருக்கின்ற நெல் உலர விடும் தளங்களைவிட மேலதிகமாகவும் தளங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது அறுவடை செய்யும்நெல்லை வீதிகளில் வைத்து பெரும் சிரமங்களின் மத்தியில் உலர விடுவதாகவும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (2-315)




## கிளிநொச்சியில் வீடமைப்பு அமைச்சினால்

## வீடுகள்,சமய கல்வி கட்டடங்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி வைப்பு





(பரந்தன்)

கிளிநொச்சியில் வீடமைப்பு அமைச்சினால் அமைக்கப்படவுள்ள 120 இற்கு மேற்பட்ட வீடுகள் மற்றும் தலா 4 மில்லியன் பெறு மதியில் சமய கல்விக்கான கட்டடங்கள் இரண்டிற்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்படி வீடமைப்பு அதிகார சபையின் கண்காணிப்பில் தலா 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளும், இந்து மற்றும் கிறிஸ்தவ சமய கல்வியை மேம்படுத்துவதற்காக தலா நான்கு மில்லியன் நிதியில் இரு கட்டடங்கள் அமைப்பதற்குமான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் திருமறை கல்விக்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், அமைச்சின் அதிகாரிகள், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், பங்குத்தந்தையர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சமய கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை அமைச்சினால் பௌத்த சமய கல்விக்காகவே வழங்கி வைக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஏனைய சமயங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312)

## வவு.தமிழ் மத்திய மகா வித்தியில் 'மகா வித்தியன்' நடைபவனி




வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் மகா வித்தியன் தினம் சங்கத்தின் தலைவர் ப.தயாபரனின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக பாடசாலையின் அதிபர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் கொடியசைத்து பலூன்கள் பறக்கவிடப்பட்ட நிலையில் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையிலி ருந்து நடை பவனி மற்றும் வாகன பவனியாக பழைய மாணவர்கள் ஆட்டம் வவுனியா பசார் வீதியினூடாக சென்று நடை பவனியானது மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

அதனையடுத்து பழைய மாணவர் அணிகளுக்கிடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் உட்பட்ட சிநேகபூர்வ விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளும். பிள்ளைகளுக்கான விநோத விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன. இந் நிகழ்வுகள் காலை தொடக்கம் மாலை வரை இடம்பெற்றது. (2-250)

## வாணிமோட்டை குளத்திற்குட்பட்ட வயல்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புத்துவெட்டுவான் பகுதியில் புதிதாக புனரமைக்கப்பட்ட வாணி மோட்டை குளத்திற்குட்பட்ட வயல்நிலங்களை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலகத் தவவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட புத்துவெட்டுவான் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாணிமோட்டை குள த்தை புனரமைத்து அதன் எல்லைக்குட்பட்ட சுமார் நூறு ஏக்கர் வரையான வயல்நிலங்களை பிரதேசத்தில் காணிகளின்றி வாழும் குடும்பங்களுக்கு பயிர்ச்செய்கைகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு பிரதேச மக்களும் விவசாய அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில் கடந்த 2017 ஆம்ஆண்டு குறித்த குளம் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் இதற்குட்பட்ட வயல் நிலங்கள் இது வரை பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

கோரிக்கை விடுத்த போதும் இதுவரை காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என காணியற்ற விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணிகள ஏற்கனவே வனவளத் திணைக்களத்தின் கீழ் மேற்படி காணிகள் காணப்பட்டதனால் இதனை பகிர்ந்தளிப்பதில் காலதாமதங்கள் காணப்படுகின்றன.

தற்போது குறித்த காணிகளை மேற்படி திணைக்களத்திடம் இருந்து விடுவித்து காணிகளற்ற விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதேச செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## கரைச்சி பிரதேச சபையின்

## அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு கனரக வாகனக் கொள்வனவிற்கு நீதிவிடுவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கக்கூடிய வகையில் கனரக வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு 25 மில்லியன் ரூபா நிதி மீள்குடியேற்ற மற்றும் நல்லிணக்க அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகள்,வடிகால்கள் என்பவற்றை புனரமைப்பதற்கு மேலதிக கனரக வாகன வசதிகள் இல்லாத நிலை காணப்பட்டது.

குறித்த குறைபாடுகள் தொடர்பிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பு செய்வதற்கும் ஏற்றவகையில் கனரக வாகனம் ஒன்றை பெற்றுத்தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மேற்படி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியிடம் விடுத்த கோரிக்கைகளுக்கு அமைவாக மீள்குடியேற்றம் புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் மூலம் 2019ஆம் ஆண்டுக்கான நிதியின் கீழ் 25 மில்லியன் ரூபா கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## 513 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் வேலைத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் 513 மில்லியன் ரூபா செலவில் 14 வரையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பல்வேறு நிதியுதவிகளில் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி திட்டத்தின் அவசர செயற்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதாவது வீதி புனரமைப்புக்கள்,சிறிய பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட 14 வகையான அபிவிருத்தி செயற்றிட்டங்கள் சுமார் 513 மில்லியன் ரூபா செலவில் மேற்படி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)



மறைந்த பாரதத்தின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டோவின் அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் குறித்த நிகழ்வு முற்பகல் 10 மணியளவில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கண்டாவளை செய்தியாளர்)

# தருமபுரம் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள தருமபுரம் பொலிஸ் நிலைய வருடாந்த அணிவகுப்பு மரியாதை அண்மையில் பொலிஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்பீர்யூவிகுணரட்ண தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை கிளிநொச்சி மாவட்ட பொலிஸ்அதிகாரி ஆர்.டி எம் ரத்நாயக்க ஏற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் கிராம மட்ட பொது அமைப்புக்களுடன் போதைப்பொருள் ஒழிப்பு சட்டவிரோத செயற்பாடுகள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கு அனைவரின் உதவியையும் ஒத்துழைப்பையும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அதிகாரி கோரியிருந்தார். (2)

# இலங்கை செஞ்சிலுவை சங்கம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி



(கண்டாவளை)

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையினால் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன

வெள்ளம் மற்றும் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றலுக்கு உதவும் வகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையினால் கிளிநொச்சி யூனியன் குளம், பூநகரி மட்டுவில் நாடு ஆகிய கிராமங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.(2-315)

## சுதந்திர தினமான இன்றைய நாளை

# கேப்பாப்பிலவு மக்கள் கறுப்புக்கொடி கட்டி துக்கநாளாக அனுஷ்டிக்க முடிவு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு படைமுகாமிற்கு முன்பாக அமர்ந்து நிலமீட்பு போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்கள் இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய தினத்தை கறுப்புக்கொடி கட்டி துக்க நாளாக அனுஷ்டித்து கவனயீர்ப்பு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 703 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபிலவு மக்கள் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

இந்த ஊடக சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போராட்டத்தை வழிநடத்துபவர்களில்ஒருவரான எஸ்.அரியகலா கருத்து தெரிவிக்கையில்,

இரண்டாவது ஆண்டாக நாங்கள் சுதந்திர நாளினை துக்கநாளாக கருதி கவனயீர்ப்பை மேற்கொள்ளவுள்ளோம்.

அனைத்தினையும் இழந்து வீதியோரமாக இருக்கும் நாங்கள் ஜனநாயக அரசு கொண்டாடும்சுதந்திர நாளினை துக்க நாளாக கறுப்புப்பட்டி நாளாக அனுஷ்டிக்க இருக்கின்றோம் என்பதை தெரிவித்து கொள்கின்றோம்.

அடுத்து போராட்டத்தினை வழிநடத்துபவர்களில் ஒருவரான இந்திராணி கருத்து தெரிவிக்கையில்,

படையினரின் வாயிலுக்கு முன்பாக போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும் எங்களுக்கு எந்தவொரு அரச பங்காளர் கட்சிகளோ அரச ஆதரவாளர்களோ எங்களுக்கு எந்த தீர்ப்பும் வழங்காத நிலையில் நாங்கள் பனியிலும் வெயிலிலும் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

எங்கள் வாழ் இடங்களில் எங்கள் வீடுகளில் இருக்கும் படையினரின் குடும்பங்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

எங்கள் காணிகளை அபகரித்து எங்கள் வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் சிங்களப் படையினர் அவர்கள் குடும்பங்களை காலையில் சொகுசுவாகனங்களில்வேலைக்காக கொண்டுசென்று விட்டு இரவு வேளைகளில் கொண்டுவந்து விடுகின்றார்கள் எங்கள் வீடுகளில் நாங்கள் வாழ்வதற்கு நிர்க்கதியற்றவர்களாக வீதிகளில் நிற்கின்றோம் இதனை கண்ணூடாக காண்கின்றோம்.

எங்கள் மண்ணில் அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழ்கின்றார்கள். நாங்கள் அகதி வாழ்க்கை வாழ்கின்றோம்.

இன்னும் எங்கள் சொந்த நிலத்திற்கு செல்லமுடியாத நிலைதான் நீடிக்கின்றது. எங்கள் மண்ணுக்காக நாங்கள் போராடி எங்கள் இடங்களுக்குச் செல்லவேண்டும்.

எங்கள் கண்முன்னே படையினர் இலங்கையின் சுதந்திர தினத்திற்கு மின்குமிழ்களைப் பொருத்தி அலங்கரிக்கின்றார்கள். ஆனால் நாங்கள் கறுப்புக்கொடி கட்டி துக்க நாளினை அனுஷ்டிக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்து கேப்பாபிலவு போராட்டத்தினை வழிநடத்தும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.பரமேஸ்வரன் கருத்து தெரிவிக்கும் போது இந்த மக்களின் போராட்டம் மிகவிரைவில் முற்றுபெறுகின்ற போராட்டமாக இருக்கின்றது. சுதந்திரதினத்தைக் கொண்டாடுகின்ற அரசு இக்கதிக்குள்ளான மக்களின் காணிப் பிரச்சினையைத் தீர்க்காது சுதந்திரதினதைக் கொண்டாடுகின்றது.

இந்த மக்களின் காணிகளை அரசு விரைவில் விடுவிக்கவேண்டும்.

இந்நிலையில் இன்றைய தினம் நடத்தவிருக்கும் கவனயீர்ப்பு நடவடிக்கைக்கு மக்கள் பிரதிநிதிகள் பொது மக்கள் மதத்தலைவர்கள் என அனைவரும் வருகைதந்து மக்களின் காணியை மீட்டெடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (2-281)




## மாணவன் தாக்கப்பட்டமை; போதைப்பொருள் ஒழிப்பு

# கோணாவில் மக்களின் அச்சத்தை தெளிவூட்டும் விசேட கலந்துரையாடல்

## பொலிஸாரினால் முன்னெடுப்பு



(கிளிநொச்சி)

கோணாவில் பிரதேச மக்களுடனான போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் மாணவன் ஒருவன் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து மக்கள் மத்தியில் இருந்த அச்சம் தொடர்பில் மக்களை தெளிவூட்டும் விசேட கலந்துரையாடல் கோணாவில் யூனியன்குளம் பகுதியில் நேற்றைய தினம் பொலிஸாரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் அப்பகுதியை சேர்ந்த மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பாடசாலை விளையாட்டுப்போட்டி தடைப்பட்டமை அனைவரும் இணைந்து நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மாலை நேர வகுப்புக்கள் மற்றும் பாடசாலையில் 1.30 மணிக்கு மேல் யாரும் நிற்கக் கூடாது என கல்வி அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளமையால் தமது பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் இதன்போது பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், கல்வி செயற்பாட்டை வழமைபோன்று கொண்டு நடத்துவத்கு அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கிராமத்தில் வயது முதிர்ந்தவர்களை விட சிறுவர்கள் 18 வயதுக்கு குறைந்தவர்கள் அதிகம் போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றனர்.

இவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொலிஸாரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது உரையாற்றிய கிளிநொச்சி தலைமை பொலிஸ் அதிகாரி ஏ.ஜி.பி.எம்.பாடெனிய மற்றும் கிளிநாச்சி பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெ.ரட்நாயக்க ஆகியோர் குறிப்பிடுகையில்,

இந்த கிராமத்தில் போதைப்பொருள் விற்பனை, மரக்கடத்தல், மண்ணகழ்வு ஆகியன இடம்பெற்று வருகின்றன.

நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இவற்றை செய்பவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இல்லாது விடின் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதி முல்லைத்தீவில் போதைப்பொருள் ஒழிப்பு செயற்பாட்டை அண்மையில் ஆரம்பித்து வைத்தார். அந்த செயற்றிட்டத்தின் பிரகாரம் பொலிஸாராகிய நாம் மாணவர்கள், இளைஞர்களை விழிப்பூட்டி வருகின்றோம். இங்கு உள்ளவர்களில் உங்கள் பிள்ளைகள் போதைப்பொருளுக்கு அடிமையாவதை யாரும் விரும்ப மாட்டீர்கள்.

எனவே உங்கள் பிள்ளைகளை சீராக வளருங்கள். அவர்களை கண்காணியுங்கள். போதைப்பொருள் தொடர்பில் எம்மோடு சேர்ந்து பயணித்தால் தான் கட்டுப்படுத்த முடியும். எம்மோடு இணைந்து செயற்பட தயாரா எனக் கேட்டபோது மக்கள் அனைவரும் தமது கரங்களை உயர்த்தினர்.

போதைப்பொருள் மற்றும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் என்னிடம் தொலைபேசி ஊடாக முறைப்பாடு தெரிவிக்கலாம் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (2)

# பாரதம்

# ரயில் தடம் புரள்வு 8 பேர் உயிரிழப்பு





(பீஹார்)
பீஹாரில் உள்ள வைஷாலி மாவட்டத்தில் சீமாஞ்சல் எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று அதிகாலை 3.30 அளவில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. அந்த ரயிலின் 11 பெட்டிகள் கவிழ்ந்ததில் 8 பேர் பலியானார்கள், ஏராளமானோர் காயமடைந்தனர்.

இது குறித்து ரயில்வே துறை டி.ஐ.ஜி.ஜா, "பீஹாரின் ஜோக்பானி ரயில் நிலையத்தில் இருந்து டில்லியின் ஆனந்த் விஹார் ரயில் நிலையம் நோக்கி சீமாஞ்சல் எக்பிரஸ் ரயில் புறப்பட்டது.

வைஷாலி மாவட்டம், ஹாஜிபுரில் உள்ள மன்ஹார் அருகே ஷாதே புஸ்ரக் பகுதி அருகே நேற்று அதிகாலை 3.30 மணிக்கு வந்தபோது ரயில் தடம்புரண்டது.

ரயிலில் இருந்த 2 ஆம் வகுப்பு படுக்கை உள்ள 3 பெட்டிகள், ஒரு ஏசி கோச், 4 சாதாரண பெட்டிகள் என மொத்தம் 11 பெட்டிகள் கவிழ்ந்தன. அதிகாலை நேரம் என்பதால், ரயில் முழு வேகத்தில் வந்தது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 8 பயணிகள் பலியானார்கள். ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். அதிகாலை நேரம் என்பதால் பயணிகள் பெரும் பாலானோர் தூக்கத்தில் இருந்தனர்.

இந்த விபத்து ஏற்பட்டவுடன் பயணிகள் அலறல் சத்தம் கேட்டு அருகே இருக்கும் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

ரயில்வே பொலிஸாருக்கும், மீட்புப்படையினருக்கும் தகவல் அளித்தனர். ரயில் பெட்டியில் ஏராளமான உடல்கள் இருப்பதாலும், இன்னும் பலர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் எனத் தெரிகிறது. மீட்புப்பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

இடிபாடுகளில்சிக்கி இருந்த பயணிகள் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ரயில்வே அமைச்சகம் உதவி எண்களை அறிவித்துள்ளது. சோன்பூர் 06158 221645, ஹாஜிபூர் 06224 272230, பராவுனி 0627 9232222 இந்த உதவி எண்களில் பயணிகளின் உறவினர்கள் விசாரித்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (7)

# பிரேசில் தூதரகம் மீது தாக்குதல்




(பெர்லின்)
ஜேர்மனியின் பெர்லினில் உள்ள பிரேசில் தூதரகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நான்கு பேர் இந்த தாக்குதலின், பின்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இளம் சிவப்பு, கறுப்பு மை முட்டை மற்றும் சிறிய ஆயுதங்கள் கொண்டு தூதரகத்தின் வாசல் மற்றும் ஜன்னல் பகுதியினைத் தாக்கியுள்ளனர்.

அரசியல் காரணங்களுக்காகவே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரேசில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் கட்டடத்திற்கு மாத்திரம் சேதம் ஏற்பட்டுள்ளதே தவிர அதிகாரிகளுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது. இந்தநிலையில் குறித்த தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# மதுரோவின் ஆட்சிக்கு முடிவுகட்ட அமெ.அழைப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் புளோரிடாவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது, வெனிசுவெலாவில் நிக்கலஸ் மதுரோவின் ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்த அழுத்தங்களை தான் முன்வைக்கப் போவதாகவும், பேச்சுவார்த்தைகளுக்கான நேரம் நிறைவடைந்து விட்டதாகவும் அவர் நேற்றைய கூட்டத்தின் போது சுட்டிக்காட்டினார்.

அனைத்து விதமான மாற்றுத் தீர்வுகளும் பேச்சுவார்த்தை மேசையில் இருந்த போதும் அதற்கான முனைப்புகள் காட்டப்படவில்லை.

எனவே, "இது பேச்சுவார்த்தைக்கான நேரம் இல்லை, செயற்பாட்டிற்கான நேரம்" என்று துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கூறினார்.

கூட்டத்தின் போது பொது மக்களின் முன்பாக கோஷமெழுப்பும் பாணியில் கருத்து வெளியிட்ட அவர் "மதுரோவின் ஏகாதிபத்திய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கான நேரம் வந்து விட்டது. அனைத்தும் நிறைவடைந்து விட்டது" என்று கூறினார்.

அந்தவகையில், வெனிசுவெலாவின் இடைக்கால ஜனாதிபதியாக ஜுவான் கெய்டோவை நியமிக்க முடியும் என்று அமெரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும், ஏனைய நாடுகள் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். (7)

# அமெரிக்காவில் துரு

# உயிரிழப்பு 30ஆ

- 2000 விமானங்
- அவசர நிலை பி



(வோஷிங்டன்)
அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவை தொடர்ந்து வீசிவரும் துருவ சுழல்காற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் மேற்கு பகுதியிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் மிகவும் குளிரான காலநிலை நிலவி வருகின்றது.

சிகாகோவில் மைனஸ் 30 டிகிரி அளவிலும் மிச்சிகனில் மைனஸ் 37 டிகிரி அளவிலும் குளிர் நிலவுகிறது. இது, மைனஸ் 40 டிகிரியைத் தாண்டும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எதிர்வு கூறியுள்ளது.

சிகாகோவில் ஓடும் ஆறு ஒன்று முற்றிலும் பனிக்கட்டியாக மாறியுள்ளது. பல இடங்களில் விமானங்களை இயக்க முடியவில்லை.

இதனால் 2000 விமானங்களின் போக்குவரத்து இரத்து செய்யபபட்டுள்ளது.

பல மாநிலங்களில் அரசு நிறுவனங்களும் பாடசாலைகளும் வர்த்தக

# ஆஸியில் வரலாறு காணா

## 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவீடுகள் இருளில்



(சிட்னி)
அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு பகுதியில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

# 1350 கிலோ மீற்றர் பா

# வெற்றிகரமாக பரிசே

(டெஹ்ரான்)
1350 கிலோமீற்றர் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கும் அதி நவீன ஏவுகணையை நேற்று வெற்றிகரமாக பரிசோதித்ததாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிகொண்ட அமெரிக்கா, அடுத்தடுத்து ஈரான் அரசின் மீது பல்வேறு பொருளாதார தடைகளை விதித்து வருகிறது. தனது நேசநாடுகளும் ஈரானை புறக்கணிக்க வேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறையின் சார்பில் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ஈரானிடம் இருந்து எந்த நாடும் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்யக்கூடாது என அமெரிக்கா நேரடி பிரசாரத்தில் ஈடுபட்டது.



இதற்கிடையில், சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான ஜனநாயக அரசை நிலை நிறுத்துவதற்காக ஈரான் அரசு இராணுவ உதவிகளை செய்து வருகிறது. இதற்கு அமெரிக்கா கடுமையான

# வெளிநாடு

## ருவ சுழல் காற்று டுக அதிகரிப்பு!

### ாங்கள் இரத்து

### ு பிரகடனம்



நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில்கடும்பனிப்பொழிவை தொடர்ந்து வீசிவரும் துருவ சுழல் காற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள் ளது என அந்நாட்டு ஊடகங் கள்செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், கடும் குளி ருடனான காலநிலை கார ணமாக உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

மேலும் கடும் குளிரி னால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் மின்சாரம் தடை ப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை, அமெரி க்காவில் நிலவும் கடுங் குளிருடனான வானிலை காரணமாக மேற்கு மாநில ங்களில் அவசரநிலை பிர கடனம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கு மாநிலங்களான விஸ்கான்சின், மிச்சிகன், அலபாமா மற்றும் மிஸிசிப்பி ஆகிய மாநிலங்களிலேயே இவ்வாறு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ாத வெள்ளம்

அங்குள்ள மவுன்ஸ்வில்லே நகரம் வெள்ளத்தில் மிதக்கிறது.

நேற்றைய தினம் அவுஸ்திரே லியாவின் வட கிழக்கு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் அங்குள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழை கொட்டுவதால் ஆற்று வெள்ளம் ஊருக்குள் புகுந்து விட்டது.

இதனால் குவிண்ட்ஸ் லேண்ட் பகுதியில் வரலாறு காணாத வெள் ளம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மவுன் ஸ்வில்லே நகரம் வெள்ளத்தில் மிதக் கிறது.

வீடுகள் மற்றும் தெருக்கள் வெள் ளத்தில் மிதக்கின்றன. மின் சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் 20 ஆயிரத்துக் கும் மேற்பட்ட வீடுகள் இரு ளில் மூழ்கி தவித்தன.

மீட்புப் பணியில் இரா ணுவ வீரர்கள் பயன்படுத் தப்பட்டுள்ளனர். ஆற்றில் இருந்து வெள்ளம் சீறிப் பாய்கிறது. அதை தடுத்து நிறுத்த 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மணல் மூட்டை கள் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

குவின்ஸ்லேண்ட் ப தி யில் இது போன்ற வெள்ளம் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஏற் பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாயும் ஏவுகணையை ிசோதித்தது ஈரான்



எதிர்ப்பை தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், எதிரி நாடான இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் மீது தாக்குதல் நடத்தும் வகையில் அதிக தூரம் செல்லும் ஏவுகணைகளை ஈரான் உருவாக்கி வருகிறது.

அவ்வகையில், 1350 கிலோ மீற்றர் தூரம்வரை பாய்ந்து சென்று தாக்கும் அதிநவீன ஏவு கணையை நேற்று வெற் றிகரமாக பரிசோதித்ததாக ஈரான் அரசு தெரிவித்துள் ளது.

'ஹோவைஸே' என பெயரிடப்பட்டுள்ள இந்த ஏவுகணை 1200 கிலோ மீற்றர் தூரத்தில் நிர்ண யிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக ஈரான் நாட்டு இராணுவ அமைச்சர் அமிர் ஹட்டாமி தெரிவித்தார்.

தாழ்வாகவும் பறந்து சென்று தாக்கும் திறன் கொண்ட இந்த ஏவுக ணையை மிகக் குறை வான நேரத்தில் தாக்குத லுக்கு தயார்படுத்தி விட லாம் எனவும் அவர் தெரி வித்தார். (7)

## இராணுவம்-பயங்கரவாதிகள் மோதல்

## படைவீரர்கள் உட்பட 15 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாது காப்பு சோதனை சாவடி மீது தலிபான் பயங்கரவா திகள் நடத்திய தாக்குதலில் படைவீரர்கள் உட்பட 15 பேர் பலியாகினர்.

ஆப்கானிஸ்தான் நாட் டில் தலிபான் பயங்கரவா திகள் வன்முறை தாக்குதல் களை நடத்தி அப்பாவி மக் களை கொன்று வருகின்ற னர். இந்த பயங்கரவாதி களை ஒழித்துக் கட்டும் பணியில் உள்நாட்டு இரா ணுவ வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இந்நிலையில், ஆப்கா னிஸ்தான் நாட்டின் தெற் கில் அமைந்துள்ள சாரி புல் மாகாணத்தின் சோதனை சாவடியில் பாதுகாப்பு படை யினர் நேற்று முன்தின மிரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த தலிபான் பயங்கரவாதிகள் சோதனை சாவடி மீது திடீர் தாக்குதல் நடத்தினர். அவர் களது தாக்குதலுக்கு பாதுகாப்பு பணியில் இருந்த வீரர்களும் பதில் தாக்குதல் நடத்தினர்.



இதில் தலிபான் பயங்க ரவாதிகள் 9 பேரும், 6 இராணுவ வீரர்களும் பலி யாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7)

## மெக்சிக்கோவில் கடும் நிலநடுக்கம்

## பொது மக்கள் திறந்த வெளியில் தஞ்சம்





(மெக்சிகோ சிட்டி)

மெக்சிக்கோவில் ஏற் பட்ட கடுமையான நிலநடுக் கம் காரணமாக கட்டடங் கள் குலுங்கின. இதனால் பொதுமக்கள் அச்சமடை ந்து திறந்தவெளியில் தஞ் சமடைந்தனர்.

மெக்சிக்கோவின் தெற் குப் பகுதியில் நேற்று முன் தினம் காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. சியாபாஸ் மாநிலம் தபசு லாவில் இருந்து 10 மைல் தொலைவில், கடலுக்கடி யில் 40 மைல் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியிருந்ததாக அமெ ரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

நிலநடுக்கம் காரண மாக கட்டடங்கள் கடுமை யாக குலுங்கின. இதனால் பொதுமக்கள், பயந்துபோய் வீடுகளை விட்டு வெளி யேறி நீண்ட நேரம் திறந்த வெளியில் தஞ்சமடைந் தனர். சில கட்டடங்களில் லேசான விரிசல் ஏற்பட்டு, சிமெண்ட் பூச்சு பெயர்ந்து விழுந்தது. நிலநடுக்கம் காரணமாக சில இடங்க ளில் நிலச்சரிவு ஏற்பட்டு, வீதிகளில் கற்கள் பெயர்ந்து விழுந்துள்ளன.

தலைநகர் மெக்சிகோ சிட் டியிலும் நில அதிர்வு உண ரப்பட்டது. அண்டை நாடான கவுதமாலா, எல்சல்வடோர் ஆகிய நாடுகளிலும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

எனினும் நிலநடுக்கம் மற்றும் அதனால் ஏற்பட்ட விபத்துக்களில் பெரிய அள வில் சேதமோ, உயிர்ச் சேதமோ ஏற்பட்டதாக தக வல் இல்லை. இதே பகுதி யில் கடந்த 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டபோது, 100 பேர் உயிரிழந்தனர். அதன்பின் னர் மெக்சிகோ சிட்டி உள் ளிட்ட மத்திய பகுதியில் ஏற் பட்ட நிலநடுக்கம் (7.1 ரிக் டர்), 400க்கும் மேற்பட் டோரை பலி வாங்கியது குறிப்பிடத்தக்கது. (7)

## ஏவுகணை உடன்படிக்கையை முறித்துக் கொண்டுள்ளோம்

### ட்ரம்பிற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் பதிலடி



(மொஸ்கோ)

அமெரிக்காவுடன் 1987 ஆம் ஆண்டில் செய்து கொண்ட ஏவுகணை உடன் படிக்கையை முறித்துக் கொண்டதாக ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் நேற்று அறிவித்துள்ளார்.

ரஷ்யா (முன்னாள் சோவி யத் யூனியன்) - அமெரிக்கா ஆகிய இருநாடுகளும் தாங் கள் தயாரிக்கும் ஏவுகணை களின் ஆற்றல் மற்றும் எண்ணிக்கை ஆகியவ ற்றை கட்டுப்பாட்டில் வைக் கும் வகையில் கடந்த 1987 ஆம் ஆண்டில் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டன.

இந்த ஒப்பந்தத்துக்கு மதிப்பளிக்காமல் ரஷ்யா ஏவுகணைகளை தயாரித்து வருவதாக அமெரிக்கா குற் றம்சாட்டி வருகிறது.

இந்நிலையில், ரஷ்யா விடம் உள்ள அத்துமீற லான ஏவுகணைகளை எல் லாம் அழிக்காவிட்டால் அந்நாட்டுடன் செய்து கொண்ட உடன்படிக்கை யில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ர ம்ப் நேற்றுமுன்தினம் தெரி வித்தார்.

சனிக்கிழமை முதல் இந்த உடன்படிக்கைக்கான நிர்ப்பந்தங்கள் எதற்கும் நாங்கள் கட்டுப்படமாட் டோம். தங்களிடம் உள்ள அத்துமீறலான ஏவுக ணைகள், ஏவுதளங்கள் மற்றும் ஏவுகணை தொடர் பான இதர தளபாடங்களை ரஷ்யா அழிக்காவிட்டால் அந்நாட்டுடனான ஏவு கணை உடன்படிக்கை யில் இருந்து இன்னும் ஆறு மாதங்களுக்குள் அமெரிக்கா வெளியேறி விடும் என ட்ரம்ப் எச்சரித் திருந்தார்.

இந்நிலையில், அமெ ரிக்காவுடன் செய்து கொண்ட ஏவுகணை உடன்படிக் கையை முறித்துக் கொண்ட தாக ரஷ்ய ஜனாதிபதி விளா டிமிர் புடின் நேற்று அறிவித் துள்ளார்.

'எங்கள் அமெரிக்க பங் காளிகள் இந்த உடன்படிக் கையில் இருந்து விலகு வதாக தெரிவித்து விட்ட தால் நாங்களும் இதில் எங்களது பங்களிப்பை வில க்கிக் கொள்கிறோம்' என புடின் மேலும் தெரிவித் துள்ளார். (7)

# அகதிகளாக தமிழ் நாட்டுக்குச்சென்ற 16 குடும்பங்கள் தாயகம் வருகை

## வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தகவல்



(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிக அலுவலக வசதிப்படுத்தலுடன் யுத்தகாலத்தில் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக சென்றவர்களில் 16 குடும்பங்கள் எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். சுயவிருப்பின் பேரில் 16 குடும்பங்களைக் கொண்ட 34 பேர் எயார் லங்கா UL-138, UL-132 மற்றும் UL-122 மூலம் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். இதில் 15 ஆண்களும் 19 பெண்களும் உள்ளடங்குவர்.

இவர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர் என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர் வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலவச பயணச்சீட்டு, ஒன்றிணைத்தல் மானிய கொடுப்பனவாக வயது வந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும், வயதுகுறைந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும், போக்குவரத்துக் கொடுப்பனவாக 2ஆயிரத்து 500 ரூபாவும், உணவு அல்லாத மானிய கொடுப்பனவாக தனிநபருக்கு 5ஆயிரம் ரூபாவும், குடும்பத்திற்கு 10,000 ரூபாவும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிக அலுவலகத்தால் வழங்கப்படுகின்றது. மேலும் மீள்குடியேற்ற அமைச்சினால் விமான நிலையத்தில் 5 ஆயிரம் ரூபாவும் தற்காலிக கொட்டகைகளுக்காக 25 ஆயிரம் ரூபாவும், உபகரணங்களுக்கு 3 ஆயிரம் ரூபாவும் காணி துப்புரவு செய்வதற்கு 5ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் வாழ்வாதாரத் திட்டங்களிலும் வீட்டுத் திட்டங்களிலும் தெரிவின் போது சிறப்புப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் ஒரு இலட்சம் அகதிகள் இந்தியாவில் உள்ளதாகவும் அதில் 65 ஆயிரம் பேர் அகதி முகாம்களிலும் 35 ஆயிரம் பேர் வெளியிலும் உள்ளார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாலியிலிருந்து இலங்கைப் படையினரின் சடலங்களை கொண்டு வருவதில் இழுபறி

(கொழும்பு)

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றிய போது, கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இரண்டு இலங்கைப் படையினரின் சடலங்களையும் கொழும்புக்கு கொண்டு வருவதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

மேஜர் வசந்தி தினேஷ் ஜெயவிக்ரம, சார்ஜன்ட் விஜேகுமார ஆகிய இரண்டு இராணுவ அதிகாரிகளும், கடந்த மாதம் 25ஆம் திகதி மாலியின் மத்திய பகுதியில் நடந்த தாக்குதலில் உயிரிழந்தனர்.

இவர்களின் சடலங்கள் ஐ.நாவின் ஏற்பாட்டில் தனி விமானம் மூலம், நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு சடலங்களை ஏற்றிய விமானம் வந்து சேரவில்லை. விமானத்தை ஒழுங்குபடுத்துவதில் ஏற்பட்ட இழுபறியே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





இந் நிலையில், இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இராணுவத்தினரின் சடலங்களுடன் குறித்த விமானம் வந்து சேரும் என்று இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. (இ-9)

# வசந்தவின் வீட்டிற்கு சென்று ஜனாதிபதி அனுதாபம்

(பொலநறுவை)

ஐ.நா. அமைதிகாக்கும்படையில் இணைந்து மாலி நாட்டில் பணியிலிருந்த போது உயிர்நீத்த மேஜர் வசந்த தினேஷ் ஜயவிக்கிரமவின் பெற்றோர் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தார்.

பொலநறுவை அபய புர பிரதேசத்திலுள்ள மேஜர் ஜயவிக்ரமவின் வீட்டுக்கு நேற்று முன்தினம் சென்ற ஜனாதிபதி, அவரது தாயாரான யு.டி.பிரேமகாந்தி



மற்றும் தந்தை கமன்கொட ஜயவிக்ரம ஆகியோரிடம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தார்.

மாலி நாட்டில் உயிர்நீத்த இராணுவ வீரர்கள் இருவரினதும் சடலங்கள் இன்று நாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளதுடன், இது தொடர்பாகவும் ஜனாதிபதி கேட்டறிந்தார்.

ஐ.நா. அமைதிப்படையில் ஈடுபட்டிருந்தபோது உயிர்நீத்த வீரர்களின் மரணம் குறித்து தான் மிகுந்த கவலையடைவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த விசேட விருந்தினர்களுக்கான புத்தகத்திலும் விசேட அனுதாப குறிப்பொன்றை பதிவு செய்தார். (இ-7)

# பாக். பயணமாகியது இலங்கைக் கடற்படை



(கராச்சி)

பாகிஸ்தானில் இடம்பெறவுள்ள 44 நாடுகள் பங்கேற்கும் கூட்டுப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்கேற்கவுள்ளது.

பாகிஸ்தான் - கராச்சியில் அமான்-2019 என்ற பெயரிலான இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 8ஆம் திகதி முதல், 13ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக, சயுரால என்ற இலங்கைக் கடற்படைக் கப்பல் கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை பாகிஸ்தானுக்கு பயணமாகியுள்ளது.

28 அதிகாரிகள், 142 மாலுமிகள் என மொத்தம், 170 இலங்கைக் கடற்படையினருடன் பயணமாகியுள்ள இந்தக் கப்பல், நாளை மறுதினம் 6ஆம் திகதி பாகிஸ்தானின் கராச்சி துறைமுகத்தை சென்றடையும்.

இதில் அவுஸ்திரேலியா, கனடா, சீனா, ஜேர்மனி, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மலேசியா, மாலைதீவு, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், கட்டார், ரஷ்யா உள்ளிட்ட 44 நாடுகளின் கடற்படைகளின், பெரும் எண்ணிக்கையான போர்க்கப்பல்களும், விமானங்களும் பங்கேற்கவுள்ளன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விலங்குகளின் பண்புகள்

காலையிலே எழுந்து கொஞ்ச தூரத்திற்கு நடந்து போறீங்க! கொஞ்ச தூரம் நடந்து போனதுக்கு பிறகு திரும்பி வீட்டுக்கு வருகின்றீர்கள்!

இது ஒரு சாதாரண விடயம் தான்.

இருந்தாலும் உங்கள் வீடு இருக்கிற இடத்தை சரியாகக் கண்டுபிடித்து வந்து சேர்கிறீர்களே அது எப்படி?

ஒரு மனிதன் தன்னுடைய வீட்டை நோக்கி போய்க் கொண்டு இருக்கிற போது சில அறிமுகமான கட்டடங்கள் வீதித்திருப்பங்கள், மரங்கள், தெருவுடைய அமைப்பு இதைப்பற்றிய விபரங்களை தன்னுடைய நினைவிலேயிருந்து மீட்டுப் புரிசீலனை செய்து , தான் சேர வேண்டிய இடம் வந்துவிட்டது அப்படி என்பதை புரிந்து கொள்கின்றான்.

சில பேர், வீட்டிலே கோபித்துக் கொண்டு வெளியிலே போவது வழக்கம். இவர்கள் எல்லாம் வேறு வீதிகள், மரங்கள் இதையெல்லாம் நினைப்புக்குக் கொண்டு வந்து அந்த வழியிலே போய்விடுவார்கள்!

இதை எதுக்கு சொல்கிறேன் என்றால்...

பட்டறிவு அதாவது அனுபவம் மூலமாக கற்றுக் கொள்கின்ற பண்புகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு. என்று இதுவரைக்கும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

சமீப காலத்திலே சில ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்துவிட்டுஇதுமாதிரிபண்புகள்விலங்குகளுக்கும்உண்டு அப்படி என்று சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள்.

இதற்கு ஏன் அவ்வளவு தூரம் போகின்றீர்கள்...

ஏற்கனவே நமக்குத் தெரிந்தது தானே...

தேனீ இருக்கின்றதே–அது தேன் கிடைக்கக் கூடிய இடங்களை நல்லா ஞாபகத்திலே வைத்துக் கொள்கின்றது.சரியாக போய் தேனை எடுத்துக் கொண்டு .. வழி தவறாமல் தேன் கூட்டுக்கு வந்து சேர்ந்து விடுகின்றது. இது எப்படி ஞாபகத்திலே வைத்துக் கொள்கின்றது தெரியுமா?

தேனின் நறுமணம், தேன் உள்ள மலரின் வடிவம் , அந்த மலர் மலரும் நேரம் இப்படி வரிசைக் கிரமத்திலே அது தகவல்களை சேமித்து வைத்துக் கொள்கின்றது.

இப்பொழுது நாமெல்லாம், நாற்காலி , மேஜை, அலுமாரி இதையெல்லாம் மரப் பொருட்கள் என்று வகைப் படுத்தி வைத்து இருக்கின்றோம் இல்லையா? இதே மாதிரி புறாக்கள் எல்லாம் ஒரே வடிவமுள்ள மரங்களை ஒரு குழுவாக வகைப்படுத்திக் கொள்கிறதாம்!

விலங்கு–பறவை–பூச்சி இது எல்லாம் சுயேட்சையாக சூழ்நிலையிலே இருக்கிறபோது எப்படி நடந்து கொள்கிறது?

ஆராய்ச்சி சாலையிலே கட்டுப்பாடான சூழ்நிலையிலே எப்படி நடந்து கொள்கின்றது?

கடந்த பத்து வருடமாகத்தான் விஞ்ஞானிகள் இதைப் பற்றியெல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தார்கள். விலங்குகள் நடந்து கொள்கின்ற விதத்தைப் பற்றி சொல்கின்ற போது இரண்டு வித அணுகுமுறை உண்டு!

உள்ளுணர்வு என்பது ஒன்று! அதாவது Instinet இன்னொன்று பட்டறிவு அதாவது அனுபவம் Experience. இது இரண்டும் தனித்தனியாக பிரிந்து இருக்கிறது இல்லை ! அனுபவத்திலே இருந்து கற்றுக் கொள்கின்ற திறமை மனிதனுக்கு மட்டும் தான் உண்டு என்று நினை த்துக் கொண்டிருந்தோம். விலங்குகளுக்கும் அந்தத் திறமை உண்டு என்பது இப்பொழுது தெரிந்திருக்கிறது.

ஒரு விலங்கிற்கு– தான் உயிர் பிழைத்து வாழ்வதற்காக, தான் வாழும் சூழ்நிலைக்கு ஏற்றபடி தன்னுடைய நடத்தையை மாற்றிக் கொள்கின்ற திறமை இருக்கிறது!

நடத்தைகளின் பரிணாமத்திலே மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் வித்தியாசமில்லை என்கிறது இப்போது தெளிவாக புரிந்து போய்விட்டது!

பொதுவாக விலங்கு–பறவை– பூச்சி இதுக்கு எல்லாம் பயிற்சி கொடுத்தால் கற்றுக்கொள்ளும் அப்படி என்று ஒரு அடிப்படையான எண்ணம் ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தது. அது சரியில்லையாம்!

பரிணாம வழியாக தோன்றிய ஓர் உள்ளுணர்வு இருந்தால் தான் ஒரு உயிரினம் ஒரு நடத்தையை மேற்கொள்ளுமாம்! அந்த உள்ளுணர்வு பரிணாம வளர்ச்சியிலே மரபு வழியாக வருகின்றது!

ஆகக் கூடிய, படைப்பிலே எந்த வித்தியாசமும் இல்லை என்பது தெளிவாகியிருக்கிறது.

அதற்கு பிறகு எதற்காக மனிதனுக்கு உள்ளே வித்தியாசம்! அகந்தையினாலே வருவது தான் இந்த வித்தியாசம். ஒருத்தர் இருந்தார். தன்னைப் பற்றி எப்பவும் மிகவும் பெருமையாக நினைக்கிறவர் அவர்.

இன்னொருத்தரைப் பார்க்கப் போனார். அவா அப் பொழுது தான் தீவிரமாக ஒரு பூச்சியைப் பற்றி ஆராய்ச்சி குறிப்பு எழுதிக் கொண்டு இருந்தார். ஒரு நிமிடம் இந்த நாற்காலியிலே அமருங்கள் இதோ வந்து விட் டேன் என்றார். வந்தவருக்கு கோபம். இந்த பூச்சியை விட நாம் என்ன மட்டமா என்று நினைத்துவிட்டார்.

"நான் யார் தெரியுமல்லவா! மிகவும் பெரிய மனிதன்!" அப்படி என்றார். உடனே அவர்... அப்படி என்றால் இரண்டு நாற்காலியிலே இருங்கள் என்றார்!

# பதவி ஆசையால் ஜனாதிபதியின் போக்கு மாறிவிட்டது

## சுமந்திரன் எம்.பி.குற்றச்சாட்டு



(வாகரை)

பதவியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென்ற கனவில், ஜனாதிபதி மைத்திரி செயற்படுவதாலேயே அவரின் போக்கு மாறிவிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வாகரையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியலமைப்பு சாத்தியமில்லை என ஜனாதிபதி கூறுவதை ஏற்று நடக்கமுடியாது. அவர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மறந்து செயற்பட்டாலும் நாங்கள் அதனைக் கைவிடப்போவதில்லை.

அதிகாரத்தைப் பகிர்ந்து வழங்குமாறு கூறுகின்றோம். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றபோது, முழு நாட்டிலும் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும்கூட வெவ்வேறு இடங்களில் நாங்கள் பெரும்பான்மைப் பலத்தை வைத்து, தீர்மானத்தை எடுக்கக் கூடியதாகவிருக்கும். அப்படியானதொரு ஆட்சி முறைக்கு மாற்றுமாறே நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலிலே வெற்றி பெற்ற போது அதனை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தவர்கள் யார் என்பதை அவர் மறந்துவிட்டார்.

ஜனாதிபதி தன்னுடைய முழு நாட்டுக்கும் கொடுத்த வாக்குறுதியை மறந்து செயற்பட்டாலும் கூட நாங்கள் அதனைக் கைவிடப்போவதில்லை" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய அரசாங்கம் சட்டரீதியானதே!

## குமார வெல்கம ஆதரவு



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைக்க ஐக்கிய தேசிய முன்னணி முன்னெடுத்து வரும் வேலைத்திட்டம் சட்டரீதியானது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி தேசிய அரசாங்கம் என்பது நாடாளுமன்றத்தில் அதிகளவான ஆசனங்களை கைப்பற்றியுள்ள கட்சி, ஏனைய கட்சிகளுடன் இணைந்து அமைக்கும் அரசாங்கம்.

தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையின் எண்ணிக்கையை 48 ஆக அதிகரிக்கவும், 45 பிரதியமைச்சர்களை நியமிக்கவும் அனுமதி கிடைக்கும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு ஆசனம் உள்ளது.

தனித்து போட்டியிட்டு, அந்தக் கட்சி அந்த ஆசனத்தை கைப்பற்றியது. இதனால், ஐக்கிய தேசிய முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பது சட்டரீதியானது.

இதில் தார்மீகம் தொடர்பான பிரச்சினையே இருக்கின்றது. சட்டரீதியான பிரச்சினைகள் இல்லை. எனினும் அமைச்சுப் பதவிகள் அதிகரிக்கப்படுவதை மக்கள் எதிர்க்கின்றனர் எனவும் குமார வெல்கம தெரிவித்தார்.

இந் நிலையில், அரசியலமைப்புச் சட்டத்தை விளக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கே இருப்பதாகவும், தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு எதிராக வழக்கு தொடரப்போவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தை அமைக்க இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இரண்டு, மூன்று கட்சிகள் தேசிய அரசாங்கத்தில் இணைய உள்ளதாகவும் சீர்குலைப்புகள் மேற்கொள்ளப்படலாம் என்பதால், அந்த கட்சிகள் பற்றிய தகவல்களை தற்போது வெளியிடப் போவதில்லை எனவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்றாவது நாளாகவும் நல்லிணக்கப்பயணம்





நாட்டில் சமாதானம் மற்றும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை வலியுறுத்தி இலங்கையைச் சுற்றி பயணம் செய்யும் மாற்றுத்திறனாளியின் பயணம் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்துள்ளது.

அதன்படி அவரின் மூன்றாம் நாள் பயணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புத்தளம் பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகியுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, அநுராதபுரம் ஊடாக நேற்று புத்தளத்தை சென்றடைந்த அவர், நேற்று கொழும்பு நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்று பின்னர் அங்கிருந்து காலி, மாத்தறை அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை, புல்மோட்டை, முல்லைத்தீவு, பரந்தன் ஊடாக மீண்டும் யாழ்ப்பாணத்தை சென்றடைவதே இந்த பயணத்தின் நோக்கமாகும் என மொஹமட் அலி தெரிவித்துள்ளார். (இ-7)

# முதிரை மரக்குற்றிகள் கடத்தல் முறியடிப்பு கனரக வாகனம் கைப்பற்று; இருவர் கைது

## குஞ்சுக்குளம் காட்டில் சம்பவம்

(குருமன்காடு)

சட்டவிரோதமான முறையில் முதிரைமர குற்றிகளைக் கடத்திச்சென்ற இருவரை கைதுசெய்துள்ளதாக புளியங்குளம் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.




இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த விசேட அதிரடிப் படையினர்,

நேற்று அதிகாலை வேளை 3 மணியளவில் ஓமந்தை, குஞ்சுக்குளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலிற்கமைய அப்பகுதிக்கு சென்ற புளியங்குளம் விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி எச்.டி.லால் ஜெயதிலக தலைமையிலான குழுவினர் இம் மரக்கடத்தல் நடவடிக்கையை முறியடித்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த மரக்கடத்தல் தொடர்பில் இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் கனரக வாகனம் ஒன்றும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யபட்ட நபர்கள் மற்றும் கனரக வாகனம், மரக்குற்றிகள் அனைத்தும் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 60 மரக்குற்றிகளும் 12 இலட்சம் பெறுமதியானதெனவும், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



(கொழும்பு)

தொடர் விடுமுறை காரணமாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் உள்நாட்டு யாத்திரிகர்களின் எண்ணிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதிகரித்துள்ளது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்சிரி பெர்ணாந்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாத்திரிகர்கள் நலன் கருதி அதிகளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயணிக்கும் பஸ்கள் மற்றும் சிறியரக வாகனங்கள் நிறுத்தப் போக்குவரத்து பொலிஸார் தனியான பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாகவும் மலைக்குச் செல்வோருக்கு பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போத்தல்கள் கொண்டுசெல்ல வேண்டாம் என அவ்வப்போது ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்குவதுடன் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர் வற்றியுள்ளதால் அதில் நீராடச் செல்ல வேண்டாமெனவும் யாத்திரிகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுவதாக கூறினார்.

3000 இற்கும் மேற்பட்ட பஸ்கள், வான்களில் வந்துள்ள யாத்திரிகளுக்கு மஸ்கெலியா பிரதேச சபை சகல வசதிகளையும் மேற்கொண்டு வருவதுடன் உணவகங்களில் தரமான உணவுகளை வழங்குமாறும் பொது சுகாதார அதிகாரிகள் அவ்வப்போது நேரில் பார்வையிட்டு வருகின்றனர்.

போதைப்பொருள் வைத்திருப்போர், பாவித்தவர்களை பொலிஸார் சோதனை மேற்கொண்டு வருகின்றதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க தெரிவித்தார். 3இலட்சத்திற்கும் அதிகமானோர் ஹற்றன் வழியாக நல்லதண்ணி சென்று சிவனொளி பாத மலையை தரிசிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (7)



யாழ்.குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழாவின் தேர்ப்பவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது.
(படங்கள் :-குருநகர் செய்தியாளர்)

## "700 வேண்டாம் 1000 வேண்டும்"

# "கூட்டு ஒப்பந்தத்தை இரத்து செய்" தொழிலாளர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டம்



(கொட்டகலை)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள கூட்டு ஒப்பந்தம் வேண்டாம் எனவும், அடிப்படைச் சம்பளமாக 700 ரூபாய் வேண்டாம் 1000 ரூபாவே கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க வேறுபாடுகளின்றி வீதியில் இறங்கிப் போராட்டங்களை முன்னெடுத்ததுடன், வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டனர்.

அந்தவகையில் நேற்று ஞாயிற்றுகிழமை கொட்டகலை டிரேட்டன் தோட்ட தொழிலாளர்கள் கொட்டகலை பிரதேச சபைக்கு முன்பாக அடிப்படைச் சம்பளமாக 1000 ரூபாவை வழங்கக் கோரி "கூட்டு ஒப்பந்தம் வேண்டாம்", "கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்" போன்ற பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியதுடன் தாம் மாதாந்தம் தொழிற்சங்கங்களுக்கு வழங்கும் சந்தாப்பணத்தை தற்காலிகமாக நிறுத்தி விடுவோம் எனவும் கோஷங்கள் மூலம் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

அத்தோடு, கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷ் தொழிலாளர்களை ஏமாற்றி விட்டதாகவும், அடுத்து வரும் தேர்தல் காலங்களில் வாக்குகளை கேட்டு வரக்கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். (இ-7)

## வடக்கு, கிழக்கில் இன்று மழை பெய்யும் சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

இன்று 4 ஆம் திகதியிலிருந்து வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில்மழையுடனானவானிலை அதிகரிக்கக் கூடுமென இலங்கைவளிமண்டலத்திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு, ஊவா, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பிற்பகல் 2 மணிக்கு பின் மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளதாக அம் மையம் தெரிவித்துள்ளது. (இ-10)

## மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அத்தியடி விநாயகர் திருக்கோயில் (ஏழு கோவில் பிள்ளையார்) மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.58 மணி முதல் 10.05 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்புச் சாத்துதல் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9மணி முதல் மாலை 5மணி வரை இடம்பெறவுள்ளது. (இ-7)

## நிஷாந்த விக்கிரமசிங்கவின் மற்றுமொரு ஊழல் அம்பலம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கன்எயர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க, மத்தள சர்வதேச விமான நிலையத்தில் சமையல் அறை ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை கேள்விமனு நடைமுறைகளை மீறி, தான் தெரிவு செய்த நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியதாக தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின் லங்கா விமான நிறுவனங்களில் நடந்த ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் இது தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் கணக்காய்வாளர் மஹேஷ் நாணயக்கார இது குறித்து ஆணைக்குழுவில் சாட்சியமளித்திருந்தார்.

நிஷாந்த விக்கிரமசிங்க, தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் சமையலறையை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன்எயர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலாபத்தில் இயங்கிய ஸ்ரீலங்கன் விமான நிறுவனம், நிஷாந்த விக்கிரமசிங்க அந் நிறுவனத்தின் தலைவராக பதவி வகித்த காலத்திலேயே நட்டத்தில் இயங்க ஆரம்பித்தது.

அந்த நிறுவனம் பல ஆயிரம் கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வேதாந்த சாதனா முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் நடத்தும் வேதாந்த சாதனா முகாம், ராம்போதவில் (Rambodha) அமைந்துள்ள சின்மயா மிஷன், சின்மய கோவில் வளாகத்தில், சுவாமி சிதாகாசானந்தாவால் எதிர்வரும் 16.02.2019 முதல் 19.02.2019 வரை நான்கு நாட்கள் நடத்தப்படவுள்ளன.

இதில் பகவான் ஆதிசங்கரரால் அருளிச்செய்யப்பட்ட "தட்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்" பாடநூலாக எடுத்து விளக்கமளிக்கப்படவுள்ளது.

அத்துடன் தியானம், சத்சங்கம், கலந்துரையாடல் மற்றும் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலய பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் உண்டு.

இதில் கலந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்கள் 10.02.2019 இற்கு முன்னர் சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும். (இ-7)

## ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் ஜனாதிபதியின் சகோதரர் டட்லி

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் சகோதரர் போட்டியிடவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரபல வர்த்தகர் டட்லி சிறிசேனவே ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுனவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணையும் போது சிறிசேன குடும்பத்தினருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என அரசியல் ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

அப்படி இல்லை என்றால் தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார். எனினும் இதற்காக ஜனாதிபதியிடமிருந்து இதுவரை டட்லி சிறிசேனவுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

அண்மையில் அரசியல் களத்திற்கு வந்த டட்லி சிறிசேன, ஊழல் எதிர்ப்பு அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

அத்துடன் ஊடக கலந்துரையாடல் ஒன்றை நடத்தி தனது கருத்தை நாட்டிற்கு வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




யாழ்.பல்கலைக்கழக சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையினரும் யாழ்.நீரிழிவுக் கழகத்தினரும் இணைந்து யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரியில் கடந்த 30 ஆம் திகதி "எமது சுகவாழ்வு எமது கையில்" எனும் தொனிப்பொருளில் நடத்திய செயலமர்வின் போது சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் சுரேந்திரகுமார், யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார கல்வி பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் துவாரகா, யாழ். நீரிழிவு கழக தலைவர் தி.மைக்கல் ஆகியோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

161



> "சைவர்கள் புனிதமாகக் கருதிய பசுவை வீட்டிற்கு ஒன்று என்ற வீதத்தில் தமது உணவுக்காக வழங்கவேண்டும் என்ற போர்த்துக்கேய தலைவனின் கட்டளையை ஞானப்பிரகாசர் என்ற சைவத் தமிழர் வெளிப்படையாக மீறியது இவற்றில் ஒன்றாகும். தனது எதிர்ப்பை மேலும் தெரியப் படுத்துவதற்காக இவர் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள புனிதத் தலமாகிய சிதம்பரத்திற்கு சென்று ஒரு கோவிலையும் கேணியையும் அமைத்தார்"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

ஆனால் அவர்கள் தமது சொந்த மதத்தை உயர்த்துவதற்காக தங்களுடைய மத ஆசாரங்கள், பாரம்பரியங்களில் அநேகமானவை, சைவசமய ஆசாரங்கள், பாரம்பரியங்கள் என்பவற்றை மிகவும் ஒத்ததாக இருந்தமையை உணரத் தவறிவிட்டனர்.

ஆறுமுகநாவலரும் அவரைப் பின்பற்றியோரும் கிறிஸ்தவத்தையும் அதன் அனுட்டானங்களையும் விமர்சித்தபோது இந்த ஒற்றுமைகளைச் சுட்டிக் காட்டி மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினர். நாம் சைவ சமயிகளின் கிறிஸ்தவ மறுப்பை ஆராய்கையில் இந்த விமர்சனங்களின் விபரங்கள் உள்ளடக்கப்படும்.

இந்த வகையிலே கிறிஸ்தவப் பகைமைக்கு எதிரானதொரு நிலைப்பாட்டைக் கைக்கொண்டதன் மூலம் சைவத்தைப் பாதுகாக்கவும் அதற்குப் புத்துயிர் அளிக்கவும் தமிழ்ச் சமுதாயம் முழுவதுமே தன்னை ஒரு அணியாக அமைத்துக் கொண்டது.

மிருகபலி, காவடியாட்டம், கோயில் செயற்பாடுகளில் சாதியம் அனுசரிக்கப்படல் மற்றும் பல்வேறு சடங்குகள், கொண்டாட்டங்கள் போன்ற புராதன ஆதிச் சைவ நடைமுறைகளை மிஷனரிமார் சாடியபோது அச்செயல் சைவ உயர் மட்டத்தினரைச் சில சீர்திருத்தங்களை மேற்கொள்ளத் தூண்டியது. ஆனாலும் இவை உடனடியாக நிகழாது படிப் படியாகவே நிகழ்ந்தன.

சுருக்கமாகக் கூறின் இலங்கை மண்ணில் காலூன்றிய கிறிஸ்தவ மிஷனரிமார் பல வழிகளில் தமது மதத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவதற்கு மிக வலிமையாகப் பிரசாரம் செய்தபோதும் அவர்களுக்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியே கிட்டியிருந்தது.

கல்விச் செயற்பாடுகள், சிறுவர்- சிறுமியருக்கு விடுதிப் பாடசாலைகள் என அவர்கள் தமது முக்கிய உபாயத்தை மாற்றியபோதும் அவர்களின் முயற்சிகள் பெருமளவு வெற்றியளிக்கவில்லை.

தமிழ்ப் பிரதேசங்கள் முழுவதும் மும்முரமாகப் பிரசாரம் செய்தும் பலனளிக்காது போகவே அவர்கள் தமது கடைசி முயற்சியாகவே வெகுசன மதமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சைவ எதிர்ப்புப் பிரசாரத்தில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்தனர்.

சைவத் தமிழரைக் கிறிஸ்தவத்திற்கு மாற்ற அவர்கள் எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியளிக்கவில்லை என்பதனைப் புள்ளிவிபரங்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன என்பதை இங்கு மறுபடியும் பார்க்க முடிகின்றது.

மாறாக இந்தத் தந்திரங்கள் அவர்களுக்கே பாதகமான முறையில் திரும்பி சைவத் தமிழ் உயர்மட்டத்தினர் தமது சமயத்தையும் சைவ கலாசாரப் பாரம்பரியங்களையும் பாதுகாத்துப் பேணுவதற்கு எழுச்சி கொள்ள வைத்தன.

சைவத்தின் சில அம்சங்கள் இதனால் சீர்திருத்தமடைந்திருந்த அதேசமயம் அதன் பாரம்பரியக் கலாசாரம் என்ற விதானத்தின் கீழ் சைவத் தமிழர் ஓர் இணைந்த சமுதாயமாக மாறுவதற்கு மேலும் வலுவான அடித்தளத்தை நிறுவவும் உதவியது.

நாவலராலும் அவர்களைத் தொடர்ந்தவர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தமிழ் விழிப்புணர்வானது பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து மேலும் வலுவடைந்து தமிழர் மத்தியில் சுயவுணர்வு தோன்ற எவ்வாறு ஊக்கமளித்தது என்பதைப் இப்போது எம்மால் காணக் கூடியதாக உள்ளது.

இந்தக் காலகட்டத்தில் தமிழ்ச் சமூகம் அனுபவித்த பல மாற்றங்களில் இந்த சமய, கலாசார விழிப்புணர்வும் பெரும் பங்கை வகித்தது. ஈற்றில் இந்த உணர்வே தமிழரது அரசியல் அபிலாசைகளிலும் தமிழ்த் தேசியவாதத்தின் தோற்றுவாயிலும் செல்வாக்குச் செலுத்தும் பெரும் சக்தியாக பரிணமிக்க காரணமாகவிருந்தது.

### சைவத்தமிழரும் கிறிஸ்தவ எதிர்ப்புப் போராட்டமும்

போர்த்துக்கேய ஆட்சிக் காலத்தில், சைவக்கோவில்கள் பெருந்தொகையில் அழிக்கப்பட்டதும், மக்களைக் கத்தோலிக்கராக மாற்றுவதற்றுப் போர்த்துக்கேயர் மேற்கொண்ட ஆக்கிரமிப்புமிக்க பிரசாரமும் சைவர்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்தன.

யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசானான முதலாம் சங்கிலியனின் ஆயுதப்படைகள் 1544 டிசெம்பரில் நிகழ்ந்த பிரசித்தி பெற்ற மன்னார் கொலைகளில் 600,700 வரையிலான கத்தோலிக்கரைக் கொன்றன.

இதற்கு எதிர்ச் செயலாக போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசத்தில் கிறிஸ்தவர் தொகையை அதிகரித்தனர். ஆனால் மேலும் பல கிறிஸ்தவ சங்காரங்கள் தொடர்ந்தன. இவற்றில் கோப்பாய் - யாழ்ப்பாணம் சங்காரம் 2 ஆவது ஆகும். ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளும் நிகழ்ந்தன. சைவர்கள் புனிதமாகக் கருதிய பசுவை வீட்டிற்கு ஒன்று என்ற வீதத்தில் 'தமது உணவுக்காக வழங்கவேண்டும் என்ற போர்த்துக்கேய தலைவனின் கட்டளையை ஞானப்பிரகாசர் என்ற சைவத் தமிழர் வெளிப்படையாக மீறியது இவற்றில் ஒன்றாகும்.

தனது எதிர்ப்பை மேலும் தெரியப்படுத்துவதற்காக இவர் தென்னிந்தியாவின் தமிழ் நாட்டில் உள்ள புனிதத் தலமாகிய சிதம்பரத்திற்கு சென்று ஒரு கோவிலையும் கேணியையும் அமைத்தார்.

(தொடரும்)

# தமிழின அழிப்பின் சாட்சியான மேரி கொல்வின் கொலை குறித்து அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு

(வோஷிங்டன்)

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை உலகளாவிய ரீதியில் எடுத்துச் சென்றவரும் இறுதிப்போர் இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் "A Private War" திரைப்படம் அண்மையில் வெளிவந்து வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கும் இந்நிலையில் அவரின் மரணம் தொடர்பில் அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது.



பத்திரிகையாளர் மேரி கொல்வின் கொல்லப்பட்டமைக்கு சிரியாவின் பஷர் அல் ஆசாத் அரசாங்கமே காரணமென அமெரிக்க நீதிமன்றமொன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

சிரிய அரசாங்கம் பத்திரிகையாளர்களை அச்சுறுத்துவதற்காகவும் தனக்கு எதிரான எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்காகவும் திட்டமிட்டு பத்திரிகையாளர்களை இலக்குவைத்தது என அமெரிக்க நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர் என்பதால் மேரிகொல்வின் விசேடமாக இலக்குவைக்கப்பட்டார் எனத் தெரிவித்துள்ள நீதிபதி, சிரியாவில் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புணர்வுகள் அதிகரித்து வருகின்றன எனச் செய்திகளை வெளி உலகிற்குக் கொண்டு செல்பவர்களை மௌனமாக்குவதற்காகவே மேரி கொல்வின் கொல்லப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

யுத்தகளங்கள் குறித்தும் யுத்தங்கள் குறித்தும் நாங்கள் அறிந்துகொள்வதற்கான முக்கியமான பங்களிப்பைச் செய்த பத்திரிகையாளர் இலக்குவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டமை மிகவும் மூர்க்கத்தனமான விடயம் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

மேரிகொல்வின் 2012 ஆம் ஆண்டு சிரியாவின் ஹோம்ஸ் நகரில் அவரின் தற்காலிக ஊடக நிலையத்தின் மீது இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டுநாயக்க எல்லையில் ட்ரோன் கமராவில் வீடியோ

## மாலைதீவைச் சேர்ந்த நால்வர் கைது



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்திய நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க அதி பாதுகாப்பு எல்லையில் ட்ரோன் கமராவில் வீடியோ எடுத்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு உரிய அனுமதியின்றி கட்டுநாயக்க அதி பாதுகாப்பு எல்லையான விமான நிலையத்தில் ட்ரோன் கமராவில் வீடியோ எடுத்த போது இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாலைதீவு நாட்டவர்கள் எனவும் அவர்களில் 3 ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 மற்றும் 23 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (இ-7)

# 2019; நிர்வாக இடமாற்றங்கள் மார்ச் முதலாம் திகதி முதல் அமுல்

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டிற்கான பொது நிர்வாக அமைச்சால் வழங்கப்படும் வருடாந்த இடமாற்றங்கள் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென பொது நிர்வாக அமைச்சின்செயலாளர்ஜேஜே ரட்ணசிறி தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட இடமாற்றங்களை அரச சேவை ஆணைக்குழு மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துமாறு கோரியிருந்தது.

இந்நிலையில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இலங்கை கணக்காளர் சேவை நிர்வாக சேவை, விசேடதர உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் பிற்போடப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களின் இடமாற்றங்கள் எவ்வித மாற்றங்களும் இன்றி குறித்ததிகதிக்குள் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு மார்ச் 31 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

## ஆட்பதிவு தகவல் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவத்தை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களத்தின் செயற்பாடு மற்றும் தகவல் ஆணையாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

தேசியஅடையாளஅட்டை தொடர்பான விசேட சுற்றுநிருபமொன்று அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் 2020 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இதன் போது விண்ணப்பிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1634

Search for people, places and things

### தமிழினி

வீட்டில ரீவி கெட்டுப் போனால் குழந்தைகள் மீது பழி போடுறாங்க... குழந்தை கெட்டுப் போனால் ரீவி மேல் பழி போடுறாங்க



### சிந்துஜன்

பணக்காரர்கள் சாப்பிடாமல் இருந்தால் விரதம் ஏழைகள் சாப்பிடாமல் இருந்தால் பட்டினி



### ரெஜி

திண்ணைகள் இல்லாமல் வீடு கட்டத் தொடங்கிய போதே முதியவர்களுக்கு இடமில்லை என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது



### சிவாகினி

என்னதான் சக்தி வாய்ந்த ஏவுகணை இருந்தாலும் ஒரு நாட்டின் பலமான ஆயுதம் ஏர் கலப்பைதான்



### சரவணன்

உலகிலேயே அதிக சம்பளம் வாங்கத் தகுதியானவர்கள் துப்புரவுத் தொழிலாளர்கள்



### தர்சி

குளிரூட்டப்பட்ட அறையில் உள்ள காய்கறிகளை விட சந்தையில் தரையில் விற்கும் காய்கறிகள் ஆரோக்கியமானது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கூட்டமைப்பில் போட்டியிடுவோருக்கு மரபணு பரிசோதனை அவசியம்!



## சிறிநேசன் எம்.பி.தெரிவிப்பு

(களுவாஞ்சிக்குடி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாக தேர்தலில் போட்டியிட விரும்புவோருக்கு மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளவேண்டிய தேவையிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மகிழூர்முனையில் பொங்கல் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி வேட்பாளராக போட்டி யிடுவதற்காக தன்னுடைய இரட்டைக் குடியுரிமைக ளில் ஒன்றைத் துறப்பதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தயாராகியுள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகளை கவர வேண்டும் என்பதற்காக புதிய வேடமொன்று தரித்திருப்பதாக அவர் முகநூலில் பதிவிட்டிருக் கின்றார்.

தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக எந்த நாடகத்தை நடத்தினாலும் அதனை விளங்கிக்கொள்ளக்கூடிய அனுபவம் எங்களிடம் இருக்கின்றது.

இனிவரும் காலங்களில் நினைத்தவாறு கட்சி விட்டு கட்சி தாவுகின்ற எந்த வொரு வேட்பாளர்களையும் நாங்கள் பட்டியலில் நியமிக்காது இருப்பதற்கு ஏற்றவகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளராக நிறுத்துவதாகவிருந்தால் அவர்களுக்கு மரபணு பரிசோதனை செய்யவேண்டிய தேவை இருக்கின்றது.


அந்த மரபணு பரிசோதனையில் பாயும் குணங்கள், பறக்கின்ற குணங்கள், சலுகைகளுக்கு, இரையாகின்ற குணங்கள் இருக்கின்றனவா? எனப் பரிசோதித்து கட்சியில் இணைத்துக் கொள்வதே பொருத்தமான தாகவிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய மட்ட கலந்துரையாடல்களை நடத்தி புதிய அரசியலமைப்பை தயார் செய்யவும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் உண்மையான தேவைகள் மற்றும் எழுந்துள்ள பிரச்சினைகள் என்பவற்றைத் தீர்ப்பதற்கான சமய மற்றும் அரசியல் ரீதியிலான தேசிய மட்ட கலந்துரையாடல்களை நடத்தி அதன் மூலம் அடையாளம் காணப்படும் தீர்வுகளை உள்ளடக்கியதாக புதிய அரசியலமைப்பு தயார் செய்யப்பட வேண்டும் என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.



அவ்வாறில்லாமல், 9 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்படும் சட்டதிட்டங்களால் முழு நாடும் சிக்கல்களுக்குள் மாட்டிக் கொள்வதாகவும் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை மேற்கோள்காட்டி இலங்கைக்கான சர்வதேச அமைப்பின் தலைவர் சுனில் சந்திரகுமார தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (இ-7)

# குழந்தையை கொன்று வீசி நாடகமாடிய கொடூரத் தாய்

## பொலிஸில் திடீர் வாக்குமூலம்

(அநுராதபுரம்)

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் காணாமல் போன சிறுமியை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

தனது மகளை கொலை செய்து கலாஓயவில் வீசியதாக தாய் ஒருவர், பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைய நேற்றுக் காலை முதல் சிறுமியை தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 150 பொலிஸார் சிறுமியின் உடலை தேடி வருகின்றனர்.

தெனுரி திஸா என்ற நான்கு வயது சிறுமியே தாயால் கொலை செய்யப்பட்டதாக வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி முதல் சாலியவெவ பிரதேசத்தில் காணாமல் போயிருந்த 4 வயது சிறுமியின் தாயாரே இவ்வாறு வாக்கு மூலம் வழங்கியுள்ளார்.

தெனுரி திஸா என்ற சிறுமி கடந்த 30ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவரது தாயார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அதற்கமைய கடந்த 4 நாட்களாக 150 பொலிஸார் சிறுமியை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சிறுமி வசிக்கும் வில்பத்து வனவிலங்கு பூங்காவில் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். எனினும் இந்த சிறுமி காணாமல் போயிருக்க வாய்ப்பு இல்லையென அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். குடும்பத்தினரே சிறுமிக்கு ஏதாவது செய்திருக்கக் கூடும் என தெரிவித்திருந்த நிலையில், பொலிஸாரின் தீவிர விசாரணையில், தனது மகளை கொலை செய்து விட்டதாக தாய் வாக்கு மூலம் வழங்கியுள்ளமையானது குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 180 | 250 |
| தக்காளி | 80 | 70 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 75 | 80 | 40 | 60 |
| கோவா | 60 | 70 | 60 | 80 |
| கரட் | 90 | 100 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 50 | 80 |
| வாழைக்காய் | 90 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 50-150 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 450 | 600 | 800 |
| போஞ்சி | 60 | 70 | 70 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 60 | 60 |
| கீரை-1பிடி | 20 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 35-40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 70 | 60 | 120 |
| முள்ளங்கி | 70 | 60 | 15 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 10 | 50 |
| வல்லாரை | 80 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | 100 | 50-60 | 100 | 60 |

# செய்தித்துளிகள்

## அமெரிக்காவிலிருந்து வைரஸ் இறக்குமதி

சேனாப் படைப்புழுவை அழிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து வைரஸ் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

"எதிர்வரும் சிறுபோகத்திலிருந்து சோள உற்பத்திக்காக இது பயன்படுத்தப்படுமென்று விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக உள்ளூரில் கண்டுபிடிக்கப்பட்ட விசேட பக்றீரியா மற்றும் பூச்சிகளுக்கு இடையில் இரண்டு வகையான சேனாப் படைப்புழுவை ஒழிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (7)

## 13 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை

(நல்லூர்)

கோப்பாய் மத்தியஸ்த சபையின் பதவி வறிதாகுகின்ற தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்குப் பதிலாக மீண்டும் உறுப்பினர்களை நியமிப்பதற்காக நடைபெறுகின்ற நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13.02.2019 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கல்விச் சான்றிதழ்கள், நல்லொழுக்கச் சான்றிதழ்கள், சமூக சேவைகள் பற்றிய சான்றிதழ்களை மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கடிதங்கள் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவால் அவர்களது முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ)

## நினைவஞ்சலிக்கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கவிஞர் நாக.சண்முகநாதப்பிள்ளையின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் இடம்பெறும். (இ-10)

## விமான சேவை முறைகேடுகள் குறித்து முறைப்பாடு செய்வதற்கு எதிர்பார்ப்பு

(கொழும்பு)



இலங்கை விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் எதிர்வரும் காலத்தில் ஊழல் மோசடி ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஊழல் எதிர்ப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அதன் இணைப்பாளர் வசந்த சமரசிங்க கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (7)

## யானை தாக்கி வயோதிபர் பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள குளுவினமடு பகுதியில் காட்டு யானை தாக்கியதில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலே பலியான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் பலியானவர், குளுவினமடு கிராமத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி(வயது 78) என உறவினர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

தமது இல்லத்திலிருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள பகுதியில், மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த போது யானை தாக்கியுள்ளதாக தெரியவருகின்றது.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7)

## போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது


சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட போலி நாணயத்தாள்களுடன் நபரொருவர் தனமல்வில பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள வியாபார நிலையமொன்றுக்கு இந்த போலி நாணயத்தாள்களை வழங்கிய வேளை, வியாபார நிலையத்தின் உரிமையாளர் குறித்த நாணயத்தாள்கள் தொடர்பில் சந்தேகத்தில் கேள்விகளை கேட்டபோது சந்தேகநபர் உடனடியாக குறித்த போலி நாணயத்தாள்களை கிழிக்க முற்பட்டுள்ளார்.

பின்னர் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார், குறித்த பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த போலி நாணயத்தாள்கள் அச்சிடும் இடமொன்றை கண்டறிந்து அதனை சுற்றிவளைத்துள்ளதாகவும், பின்னர் அங்கிருந்து ஸ்கானர் ஒன்றையும், 1000 ரூபாய் தாள்கள் எட்டும், 5000 ரூபாய் தாள்கள் எட்டும் மீட்கப்பட்டதாகத் தெரிவித்தனர். (7)

# சிறுவர் அரங்கம்

## என் வீடு?



பண்ணைபுரம் என்ற ஊரில் விசாகன் என்ற புத்திசாலி கிழவர் வசித்து வந்தார். ஒருமுறை கிழவரது மனைவி, ஊருக்குச் சென்றிருந்தாள். கிழவர் மட்டும் அப்போது வீட்டில் இருந்ததால், வெளியே செல்லும்போதெல்லாம் வீட்டைப் பூட்டிவிட்டுச் செல்வது வழக்கம்.

ஒருமுறை அவர்வெளியே சென்று விட்டு வரும் போது, அவர் வீட்டிலிருந்து ஒரு திருடன் மூட்டையுடன் வெளியே வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே கிழவர் வீட்டிற்குள் சென்று பார்த்த போது, வீட்டில் ஒரு பொருள் கூட இல்லை. சுத்தமாக காலி செய்து வைக்கப்பட்டிருந்தது.

கிழவர் வேகமாக வெளியே ஓடி வந்து திருடனைப் பின் தொடர்ந்தார்.

திருடன் தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்து தான் கொண்டு வந்த மூட்டையை அங்கு வைத்து விட்டுக் கொல்லைப்புறம் சென்றான்.

வீட்டுக்குள் வந்த கிழவர், அங்கு பார்த்த போது வீடு முழுவதும் அவருடைய பொருட்கள் நிறைந்திருக்கக் கண்டார்.

அந்த பலே திருடன் ஒவ்வொரு நாளாக கிழவரின் வீட்டிற்கு வந்து, அவருக்கே தெரியாமல் அவருடைய பொருள்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருடி வந்திருக்கிறான்.

உடனே கிழவர் அங்கிருந்த பாய் ஒன்றை எடுத்துப் போட்டு அதில் படுத்துக் கொண்டார்.

கொல்லைப் புறம் சென்ற திருடன் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். அங்கு கிழவர் படுத்திருப்பதைக் கண்டு, "யார் நீ?" என்று கேட்டான் திருடன்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் விசாகன்!" என்று கூறினார்.

"நீ விசாகனாக இருந்தாலும் சரி, குசாகனாக இருந்தாலும் சரி. என் வீட்டில் உனக்கு என்ன வேலை?" என்று திருடன் அதட்டினான்.

"உன் வீடா? என் வீட்டிற்குள் நீ வந்து என்னையே மிரட்டுகிறாயா?" என்றார் கிழவர்.

"உனக்கென்ன பைத்தியமா? என்ன உளறுகிறாய்?" என்றான் திருடன்.

"இதோ பார்! என் வீட்டிலிருந்த பொருள்களை எல்லாம் நீ இங்கே கொண்டு வந்து வைத்து விட்டாய். அப்படியானால் நான் புது வீட்டிற்கு குடியேறி இருக்கிறேன் என்று தானே பொருள்? நானும் நீண்ட நாட்களாக வீடு மாற வேண்டும் என்று நினைத்திருந்தேன். வீடு நன்றாக இருக்கிறது. வாடகை எவ்வளவு?" என்றார் கிழவர்.

தான் கிழவனிடம் வசமாக மாட்டிக் கொண்டதை அறிந்த திருடன் தான் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் எடுத்துச் சென்று கிழவரின் வீட்டில் திரும்பவைத்து விட்டான்.

## பறவைகள் பற்றிய தகவல்கள்



நாம் பார்த்து பொறாமைப்படும் இனங்களில் பறவை இனம்தான் முதலில் இருக்கும். சுதந்திரத்திற்கு பெயர்போன பறவை இனங்களைப் பற்றிய சில தகவல்களை இங்கே காணலாம்.

பொதுவாக பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில், பறவைகளின் கால்களில் சிறு வளையத்தை மாட்டி விட்டு, அதன் மூலம் பறவையினங்களின் வாழ்வியல் முறை, நடமாட்டம், ஆயுள், இனவிருத்தி போன்றவற்றை ஆய்வு செய்கின்றனர்.

கால்களின் அளவுக்கு ஏற்ப சிறிய மெட்டி போன்று இந்த வளையம் அமையும். இந்த வளையத்தில் சில குறியீட்டு தகவல்கள் இருக்கும். இதுபோன்று வளையமிட்ட பறவையைப் பார்க்கும் பறவை ஆர்வலர்கள், இந்த வளையத்தில் இருக்கும் குறியீட்டைக் கொண்டு, வளையத்தை மாட்டியவர்களை தொடர்பு கொண்டு பேசும் போது பறவை தற்போது, எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள இயல்கிறது.

இனி பறவைகளைப் பற்றி பார்ப்போம்...

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.

கடல் புறாக்கள் நீரில் மிதந்து கொண்டே தூங்கும்.

பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.

மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.

குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.

புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.

ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.

நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.

ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

மிகப் பெரிய நீர்ப் பறவை அன்னம்.

வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.

வான்கோழிகள் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

கடல் தாண்டும் பறவைக்கெல்லாம் இளைப்பாற மரங்கள் இல்லை.

கலங்காமலே கண்டம் தாண்டுமே.. இதை நினைத்துத்தான் நாம் நமக்கு வரும் சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் கொள்ள வேண்டும் குழந்தைகளா..

## கிணறுகள் வட்ட வடிவில் இருப்பது ஏன்?



கிணறுகள் எங்கு இருந்தாலும், அவை வட்டவடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கும். எதற்காக இந்த வடிவத்தில் மட்டும் அமைக்கிறார்கள் என்று பார்ப்போமா... கிணறுகள் தோண்டியவுடன், அவற்றின் நான்கு பக்கத்திலும் வடிவம் கலையாமல் இருக்கச் செய்வது கிணற்றைச் சுற்றிலும் வட்டவடிவில் உள்ள மண் மற்றும் கல்லின் எடைதான்.

கிணற்றை வட்டவடிவில் அமைக்கும்போது மட்டுமே அதன் திறன் அதிகரிக்கிறது.

பொதுவாக ஆர்ச் வடிவ வளைவிற்கு அதிகளவில் எடை தாங்கும் திறன் உண்டு. அதனால் தான் அந்த காலத்தில் கட்டடங்கள், மண்டபங்கள், பாலங்கள் என்று எல்லா இடங்களிலும் அவை, ஆர்ச் வடிவ வளைவுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும். இரண்டு அரை வட்ட ஆர்ச்சுகள் சேர்ந்து, வட்ட வடிவை உருவாக்குகின்றன.

மந்திரியாரே ஏன் அவனை அடிக்கிறீங்க?
மன்னா, நம்ம இராணுவ இரகசியத்தை வெளியில சொல்லிட்டான்.
நம்மகிட்டதான் இராணுவமே கிடையாதே...!
அதைத்தான் சொல்லிட்டான்...!



மிருகங்களைப்போல் நடந்து கொள்கிறவன் சுதந்திர மனிதனாக இருக்க முடியாது.

– மகாத்மா காந்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இன வன்மம் ஆரம்பித்து 71 ஆண்டுகள் நிறைவாகிற்று

நாட்டின் 71ஆவது சுதந்திர தினம் இன்றாகும். மிக நீண்டகால வரலாற்றைக் கொண்ட இலங்கை மண்ணை இராவணேஸ்வரன் ஆட்சி செய்த சரிதத்தை இராமாயணக் காப்பியம் எடுத்துரைக்கும்.

மிகச்சிறந்த சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் இலங்கை மண்ணை ஆண்டதனால் இலங்கை வேந்தன் என்று அவன் புகழப்பட்டான்.

இவ்வாறாக தமிழர் இராச்சியம் கோலோச்சிய காலப் பகுதி இன்று மறைக்கப்பட்டு மிக அண்மித்த காலப் பகுதியில் நின்று கொண்டு இலங்கையின் சரிதத்தைப் புரட்டி எழுதுகின்ற வஞ்சகத்தனம் நடந்தாகின்றன.

கால ஓட்டத்தில் – மிக நீண்ட காலத்தின் அசைவில் பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாதவையாயினும் ஆட்சி உரித்துக்களும் நில உரித்துக்களும் மாற்றப்படுவது அல்லது மறைக்கப்படுவதென்பது அடிப்படையை நிர்மூலமாக்குகின்ற செயலாகும்.

இத்தகைய செயலைச் செய்து கொண்டு இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்களும் கொண்டாட வேண்டும் என்று ஆளும் வர்க்கமும் பெரும்பான்மை இனமும் நினைப்பது எந்த வகையிலும் நியாயமானதன்று.

இலங்கை நாடு சுதந்திரமடைந்து 71 ஆண்டுகள் ஆகிவிட்டதென்று சுஹிக்கொள்ளும் அதே நேரம் சிறுபான்மைத் தமிழ் மக்களை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் வதைத்த கொடுமையை இந்த உலகப் பிரபஞ்சம் இருக்கும் வரை மறக்க முடியாது.

நாட்டின் சுதந்திர தினத்தை 71 ஆண்டுகளாகக் கொண்டாடுவதும் முப்படைகளின் அணிவகுப்பு இடம்பெறுவதும் இருபத்தொரு வேட்டுக்களை பீரங்கிகள் தீர்ப்பதும் சுதந்திர தினத்தின் அடையாளமாகிவிடாது.

மாறாக சுதந்திரம் என்றால், மக்கள் மகிழ்வுடன் வாழ வேண்டும். இன, மத, மொழி பேதங்கள் களைந்து மானிடம் உயர்ந்து நிற்க வேண்டும்.

நாட்டின் ஆட்சியிலும் முப்படையிலும் நிர்வாகத்திலும் அனைத்து இன மக்களும் பங்கேற்பதாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான சுதந்திரமாகும்.

மாறாக முப்படை முழுவதும் சிங்களம்; அணி வகுப்பு மரியாதையை கடந்த 71 ஆண்டுகளாக ஏற்பதும் சிங்களம்; சுதந்திர தினம் எமக்கே சொந்தம் என்று கொண்டாடுவதும் சிங்களம் என்றால் சுதந்திரம் என்பது சிங்கள மக்களுக்கானதா அல்லது இலங்கைத் திருநாட்டுக்கானதா? என்ற கேள்வி எழும்.

ஆக, இத்தனை ஆண்டுகள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றோம் என்று சிங்கள மக்கள் நினைக்க,

அதன் மறுமுனையில் பெளத்த சிங்களப் பேரினவாதம் எங்கள் மீது இன வஞ்சகத்தைச் செய்யத் தொடங்கி 71 ஆண்டுகள் ஆகிவிட்டன என்று தமிழ் மக்கள் நினைக்கின்றனர்.

இந்த நினைப்பை முடிவுறுத்தி இலங்கைத் திருநாடு அனைத்து இன மக்களுக்கும் உரியது என்ற நிலைமை எப்போது ஏற்படுத்தப்படுகின்றதோ அன்றுதான் இலங்கைக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கும்.

# தமிழர்களின் உரிமைகளை பெற்றுக்கொள்ள உறுதியான ஒரு மாற்று அணி தேவை

## ஈ.பி.ஆர்.எல்.எவ் மாநாட்டில் தீர்மானம்

தமிழரசுக் கட்சி மக்கள் ஆணையை புறக்கணித்து செயற்படுகின்ற நிலையில், தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உறுதியான ஒரு மாற்று அணி தேவை என்பதோடு இக்கொள்கையுடைய அரசியல் சக்திகள் ஒன்றிணைய வேண்டும் என்றும் இலங்கையில் நடைபெற்ற யுத்தக்குற்ற விசாரணைப் பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம், தனது தீர்மானத்தின் படி இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, இந்த விடயத்தை ஐ.நா. பாதுகாப்பு சபைக்கோ அல்லது ஒரு பிரத்தியேக தீர்ப்பாயத்திற்கோ கையளிக்கும்படியும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம மண்டபத்தில் நடைபெற்ற இந்த பிராந்திய மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவற்றில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும்என்பதோடு, ஐ.நாவின் தீர்மானத்திற்கமைய, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சர்வதேச நியமனங்களுக்கு ஏற்ப முழுமையான விசாரணை நடத்தி, நீதி வழங்குமாறு இம்மாநாடு ஐ.நாவை கேட்டுக்கொள்கிறது.

இதனைவிட, முப்படையினரும் வடக்கு-கிழக்கில் விவசாயம் மற்றும் வர்த்தகங்களில் ஈடுபடுவதை நிறுத்துதல், வேலைவாய்ப்புக்களில் அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை வழங்கல்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்தல் என்பதோடு, ஐ.நாவின் தீர்மானத்திற்கமைய, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப முழுமையான விசாரணை நடத்தி, நீதி வழங்குமாறு இம்மாநாடு ஐ.நாவை கேட்டுள்ளது.

அத்துடன், பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவது தொடர்பாகவும் இலங்கை இந்திய அரசாங்கங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் போதைவஸ்து பாவனை முன்னெப்பொழுதையும்விட இப்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளது. இந்நிலையில், போதைவஸ்தைக் கடத்துவோர், கையிருப்பில் வைத்திருப்போர், அதனை விற்பனை செய்வோர், அவற்றை பயன்படுத்துவோருக்கு மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு இப்போதைவஸ்து பாவனை ஒழிகப்பட வேண்டும் என்று பொலிஸாரையும் நீதித்துறையையும் கோரியுள்ளது.

வடக்கில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை என்பவற்றிற்கூடாக பலநூறு பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் இம்மாநாடு கோருகிறது.

அத்துடன் புனர்வாழ்வளிக்கப்பட்ட 12,000 போராளிகளை பயங்கரவாதிகள் என்று ஒதுக்கிவிடாமல், இவர்களுக்கான வாழ்வாதாரத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இம்மாநாடு அரசைக் கோருகின்றது.

மேலும், மிக நீண்டகாலமாக வடக்கில் இறக்குமதியை குறைத்து விளைபொருட்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படாமல் விளைபொருட்களுக்கானவிலையை அரசாங்கம் நிர்ணயம் செய்ய வேணடும் என்ற தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (மு-3)

(மேலும் செய்திகளும் படங்களும் 5ஆம் பக்கத்தில்)

# வவுனியா, முல்லைத்தீவில் இடம்பெறும் பௌத்த மயமாக்கலை தடுப்போம்

## எம்.ஏ.சுமந்திரன் எம்.பி உறுதி

(கரணவாய்)

வவுனியா, முல்லைத் தீவு போன்ற பகுதிகளில் இடம்பெற்று வரும் பெளத்த மயமாக்கலை தடுப்போம் என ஆணித்தரமாக தெரிவித்தார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

சாவகச்சேரி பிரதேச கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற மக்கள் கருத்தாடல் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்திலே அவர்களது நீட்சியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவானது என்று சொல்லப்பட்டது. அதில் ஓரளவிற்கு உண்மை உண்டு. ஓர் இணக்கப்பாட்டிலே அந்த ஒத்துழைப்பு வந்தது. அதன் நீட்சியையே பலர் இன்று பார்க்கிறார்கள்.

பாராளுமன்றத்திலே சபாநாயகர் தலைமையில் குழு ஒன்று உண்டு எதிர் வரும் 7ஆம் திகதி கூடும் கூட்டத்தில் பெளத்த மயமாக்கலுக்கு முடிவுகட்டப்பட வேணடும். அதை செய்வோம் என அவர் தனது நீண்ட உரையில் தெரிவித்தார். (ம-60)

# அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அபிராமிப்பட்டர் விழா இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி அபிராமி அந்தாதி பாடப்பட்டு அம்பாளுடன் அபிராமிப்பட்டர் பவனி வரும் காட்சியும் இடம்பெறும். (மு-3)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை வவுனியா பிரதேசத்தில மலையா பருத்திக்குளம் பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் பிரதேசம், முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், முருங்கன்பிட்டியிலிருந்து செம்மண்தீவு வரை, செம்மண்தீவு Ware House, டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும், மின்தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஜீவகாந்த சக்தி



இந்த உடலிலே திடப் பொருள், நீர்ப்பொருள், வெப்பம், காற்று, உயிர் என்று இவற்றை எடுத்துக் கொண்டு பார்த்தோமேயானால், அந்த உயிரானது மிக மிக நுண்ணிய பரமாணுக்கள். கோடி கோடி பரமாணுக்கள் அந்த விண் துகள்கள் கூட்டாக இயங்கிக் கொண்டிருப்பது தான் உயிர். ஒவ்வொரு உயிர்த் துகளிலேயும் தன்னுடைய சுழற்சியினால் வரக்கூடிய விரிவு அலை ஒரு அழுத்தம் பெறுகிறது. ஏனென்றால் வெளியிலே இருக்கக் கூடிய உயிருக்கும் உள்ளே உள்ள உயிருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இது உடலிலே சுழன்று சுழன்று ஏழு தாதுக்களுக்குச் சத்துப் பொருளாக **(Essence)** வரக்கூடிய **Ectoplasm** அல்லது ஓஜஸ என்று சொல்லக் கூடியதாகவும் இருக்கக் கூடிய ஒரு வியத்தகு ஆற்றல் பெற்றது தான் இங்கே உள்ள உயிர். அதில் ஒரு பூச்சு வேலை நடந்த பிறகு **(Treatment)** பதிவு செய்வது, பிரதிபலிப்பது என்பதால் அதிகமான இயக்க வேகம் பெறுகிறது. நாம் பேசுவது ஒரு **Tape**ல் பதிந்து கொண்டே இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதை எடுத்துப் பார்த்தால் வெறும் பிளாஸ்டிக் தான். ஒட்டுவதற்காக **Cellotape** வைத்திருக்கிறோமே அதை **Tape Recorder**ல் போட்டு ஓட்டினால் பேச்சைப் பதிவு செய்து விட முடியுமா? முடியாது. ஏனென்றால் வுயிநக்கு முதலில் ஒரு காந்தப் பூச்சு **(Magnetic treatment)** கொடுக்க வேண்டும். பிறகு தான் அது பதிவை ஏற்கும். ஏற்ற பின் பிரதிபலிக்கும்.

அது போலப் பதிதல், பிரதிபலித்தல் **(Functions)** என்று மன இயக்கத்திற்கு உரிய செயலாக எண்ணும்போது அந்த உயிர்ச் சக்தி சுழலும் போது தானாகவே அந்த அலை வெளிவந்து கொண்டே இருக்கும். அப்படி உடல் முழுவதிலும் இருக்கக் கூடிய உயிர்சக்தி சுழன்று வெளியிடக்கூடிய அலையினுடைய அழுத்தம் உடலிலே ஜீவகாந்த சக்தி என்று சொல்லுகிறோம். அந்த அலை அழுத்தம் தான் ஜீவகாந்த சக்தி. உயிருக்கும் ஜீவகாந்த சக்திக்கும் வித்தியாசம் உண்டு. உயிர் என்பது ஒரு இயக்க நிலையம். இயங்கிக் கொண்டே இருப்பது. அதிலே இருந்து வெளிவந்து விரிந்து கொண்டே இருப்பது விரிவு அலை - அதுதான் ஜீவகாந்த சக்தி.

## கண்ணிவெடி அகற்றும் செயற்றிட்டம் நிதி திரட்ட மாபெரும் மரதன் ஓட்டம்



மனித நேய கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களில் ஒன்றான ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் பணியாளர்கள் கடந்த 2 ஆம் திகதி கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டிற்கு நிதி கோரும் விழிப்புணர்வு மரதன் ஓட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது கண்ணி வெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வரும் பிரதேசமான முகமாலையில் ஆரம்பமான நிதி கோரும் விழிப்புணர்வு ஓட்டம் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அலுவலகத்தில் நிறைவுற்றது.

இதில் கண்ணிவெடி அகற்றும் பெண்கள், ஆண்கள் என சிலர் கலந்து கொண்டனர். (க)



கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை அதிபர் ம.திசரூபன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கண்டாவளை பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் பூ.ராஜ்வினோத், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை கோட்டக்கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம் , கௌரவ விருந்தினராக கண்டாவளை பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவருமான தி.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



யாழ் இந்துக்கல்லூரி 39வது வீதியோட்ட நிகழ்வு மிகக் கோலாகலமாக நடைபெற்றது. நிகழ்விற்கு யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய அதிபருமாகிய மகேசன் கஜேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதோடு, இதனை யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவி பணிப்பாளர் சண்.தயாளன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். முதன் முறையாக இவ்வாண்டு முதல் பத்து வீரர்களுக்குமான கௌரவிப்பு நடைபெற்றது. இதற்கு அனுசரணையினை கு.அமரேஸ், திருமாறன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.



ஒலுமடு தமிழ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



முல்லைத்தீவு - கொக்கிளாய் அ.த.க பாடசாலையில் 2019ஆம்அண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரன் கலந்துகொண்டார்.




மன்னார்-அல்-அஸ்ஹர் ம.வி.தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை முதல்வர் எம்.வை.மாஹீர் தலைமையில் இடம்பெற்றது.



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரத்தினம் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் பாடசாலை அதிபர் மா.செல்வராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி கடந்த 31 ஆம் திகதி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

# வடக்கு மாகாணத்திற்கு முன்னுரிமை அளியுங்கள்!

## ஆளுநர் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றுள்ளதாக ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட ஒரு மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படு வதால் அது அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கியுள்ளதனை அதிகாரிகளுக்கு ஆளுநர் சுட்டிக்காட்டி யிருந்தார்.

மேலும், நிரல் அமைச்சுக்களின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டுமென்று ஆளுநர் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் நிரல் அமைச்சுக்களுடன் வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் இணைந்து பணியாற்றக்கூடிய சாத்தியமான வழிமுறைகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் மத்திய மற்றும் மாகாண இரு தரப்புக்களும் இணைந்து செயற்படுவதனூடாக மக்களுக்கு தேவையான துரித அபிவிருத்தியினை காத்திரமாகவும் துரிதமாகவும் வழங்க முடியும் என்பதனையும் ஆளுநர் இதன்போது நிரல் அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

விவசாய அமைச்சு, காணி அமைச்சு, சுற்றுலா அபிவிருத்தி அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சு, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு உள்ளிட்ட நிரல் அமைச்சின் அதிகாரிகளும் புகையிரதத்திணைக்களம், நில அளவைத்திணைக்களம், காணி ஆணையாளர் நாயக திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், இலங்கை மீன்பிடித்துறை முகங்கள் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட திணைக்களங்களின் தலைவர்களும் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (மு-3)

# இராணுவத்துக்காக கலந்துகொள்வதாக மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய சுதந்திர தின நிகழ்வில் தாம் கட்டாயம் கலந்து கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமஹா விஹாரையில் வைத்து ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கப்படும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரால் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் குறித்த நிகழ்வில் பயன்படுத்தப்படு கின்றன.

ஆகவே தாம் அதனை காணுவதற்காக நிகழ்வில் கலந்துக்கொள்வதாக அவர் குறிப்பிட்டார். (மு-3)

# புதிய கட்சியை தொடங்கமாட்டேன் — சந்திரிகா



(கொழும்பு)

புதிய கட்சியைத் தொடங்கும் முயற்சிகளில் தான் ஈடுபடவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் சிலருடன் இணைந்து புதிய கட்சியை அமைக்க சந்திரிகா தயாராவதாக, கடந்த வாரம் ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகள் குறித்து, கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அழிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை நாம் கட்டியெழுப்புவோமே தவிர புதிய கட்சியை அமைக்கமாட்டோம். தொடர்ந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலேயே இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-3)

## தமிழ் மக்களின் அழுகுரலை...

கப்பட்ட முதலாவது தமிழ் மொழி ஆளுநர் நான். அதனால், தமிழ் மக்களின் அழுகுரலை எனது சொந்தக் குரலில் கேட்கக்கூடியவாறு உள்ளது. இந்த நியமனத்தில் ஜனாதிபதியின் ஒரு அரசியல் சமிக்ஞை உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

குறிப்பாக இலங்கை பல கலாசார மற்றும் பல மொழியியல் சமுதாயத்துடனான ஒரு நாடாகும். மேலும் தமிழர்கள் தங்கள் உரிமைகளை ஒரு பிரிக்க முடியாத நாட்டில் சந்தித்திருக்கிறார்கள்.

மேலும் இந்த நியமனத்தால், வடக்கு தமிழ் மக்களின் அழுகை மற்றும் வேண்டுகோளை அவர்களது சொந்த மொழியில் என்னால் கேட்க முடியும்.

அது சமூக குணமாகும். அத்தோடு மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றில் எனது முன்னுரிமை இருக்கும்.

இந்தியாவில் சுமார் 100.000 இலங்கை அகதிகளை இன்று நாம் கொண்டுள்ளோம். அவர்கள் தாய்நாட்டுக்கு திரும்புவதற்கான உரிமை உண்டு. இங்கு கேள்வி என்னவென்றால், அவர்கள் திரும்பி வந்தால் எங்கே தங்கலாம்? அவர்களுக்கு நிலம் தேவை.

யுத்தம் முடிவடைந்த 2009 இல் இருந்து இன்றுவரை இராணுவம் அரச நிலத்தையும், தனியார் நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளது. 2010 இல் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின் தனியார் மற்றும் அரச காணிகள் 90 வீதமானவை விடுவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு விடுவிக்கப்பட்ட இந்த நிலங்களின் உகந்த பயன்பாட்டிற்காக நாம் திட்டமிட வேண்டும். அத்தோடு இடம்பெயர்ந்த மக்களை இங்கு மீள்குடியேற்றுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

சிலர் இன்னமும் யாழ்ப்பாணத்தில் முகாம்களில் வாழ்கிறார்கள். அவர்கள் மீனவர்கள் என்றால், கடலுக்கு அருகில் நிலங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் சில மூலோபாய காரணங்களுக்காக இராணுவம் கடற்கரையோர நிலத்தை விடுவிக்க முடியாது என்றால், இடம்பெயர்ந்தோர் மாற்று இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள்.

இப்பகுதியில் 65.000 வீடுகள் போரில் சேதமடைந்துள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை மீண்டும் கட்டுவதற்கான முயற்சிகள் வெற்றிகரமாக இல்லை. இன்று வடக்கு அபிவிருத்தி முன்னுரிமை பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் 16.000 முன்னாள் போராளிகள் உள்ளனர்.

இங்குள்ள விவசாயிகள், மீனவர்கள் மற்றும் வியாபாரிகள் அடிமட்டத்தில் உள்ளனர். ஆகையால், எனது கவனம் விவசாய மற்றும் கடற்தொழில் பக்கம் இருக்கும் என கூறியுள்ளார். (மு-3)

## வர்த்தகருக்...

மாற்றம் செய்ய முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பெல்லன்வில ரஜமஹா விகாரையில் நேற்று நடைபெற்ற சமய நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அதேவேளை தேசிய அரசாங்கத்தை அமைப்பது கேலிக்குரியது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சுங்க திணைக்களத்தின் பணிப்பாளராக பி.எஸ்.எம். சார்ள்ஸ் கடமையாற்றி வந்தார். திணைக்களத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

இந் நிலையில் சுங்க திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பீ.எஸ்.எம்.சார்ள்ஸை பதவியில் இருந்து முறையற்ற விதத்தில் நீக்கிவிட்டு அப்பதவிக்கு ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இதைக் கண்டித்த சுங்க உத்தியோகத்தர்கள் 5 நாட்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-3)

# தூக்குத் தண்டனையால் போதைப் பொருள் வியாபாரத்தை நிறுத்த முடியாது - மகிந்த

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றும் தீர்மானம் மாத்திரம் போதுமானதல்லவென எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் வியாபாரத்தின் பின்னால் சில பொலிஸ் அதிகாரிகள் செயற்படு கின்றனர்.

இந்த அதிகாரிகளுக்கு அரசியல்வாதிகளின் தொடர்பு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போதைப் பொருள் வியாபாரத் தைக் கட்டுப்படுத்த பொலிஸ் அதிகாரிகளும், இராணுவமும் இணைந்து தொடர் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாக இருந்தால், சட்டவிரோதமாக செயற்படும் பொலிஸாரையும் இனங்கண்டுகொள்ளலாம் எனவும் மகிந்த ராஜபக்ஷ எம்.பி. மேலும் கூறியுள்ளார். (மு-3)

## மக்கள் உங்களில்...

யில் ஒரு மாற்றுத் தலைமை வேகமாக உருவாகி வருவதைப் பற்றி சாதகமான எதிர்மறையான கருத்துக்கள் உலாவி வருகின்றன.

அவை எப்படியாக இருந்தாலும் இன்றைய கேள்வி இந்த மாற்றுத் தலைமை உருவாக காரணம் என்ன? அவர் ஆட்சியில் இருந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பல தடவைகள் முரண்பட்டது எல்லோரும் அறிந்ததே.

இந்த முரண்பாடுகளுக்கு காரணம் என்ன? என்று முன்னாள் முதலமைச்சர் திரும்பத் திரும்பச் சொன்ன ஒரே ஒரு விடயம் நான் 2015ஆம் ஆண்டு மக்கள் கொடுத்த ஆணையின் படிதான் செயற்படுகிறேன்.

அதை அவர்கள் செய்கிறார்கள் இல்லை அதனாலே இந்த முரண்பாடு எனச் சொன்னார்.

சமஷ்டி ஆட்சி என்று 2015 ஆம் ஆண்டு வடக்கின் தேர்தல் மேடையில் பேசினீர்கள் பின்பு தெற்கில் சென்று ஒற்றையாட்சி என்றீர்கள். மீண்டும் வடக்கு வந்து இரண்டும் ஒன்று தான் ஆனால் சொற்பதங்கள் வேறென்றீர்கள். இதை நாங்கள் நம்பவேண்டும். நாங்கள் இன்று உங்களில் நம்பிக்கையிழக்க நீங்களே காரணமாகி விட்டீர்கள்.

எங்களை நீங்கள் ஏமாற்றி விட்டீர்கள் என அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளார். (மு-3)

## சுதந்திரதினத்தை...

றப்பட்டும் வருவதை எதிர்த்து இந்த போராட்டத்தை தமிழ் மக்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

இன்றைய தினம் தமிழர் தேசம் எங்கும்முன்னெடுக்கப்படும்அனைத்து போராட்டங்களிலும் பொதுமக்களை கலந்து கொண்டு தமது எதிர்ப்பை தெரிவிக்குமாறு அண்மையில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டிருந்ததது.

அந்தவகையில் நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களுடன் இணைந்து இன்று காலை 10.00 மணிக்கு அமைதி வழி சத்தியாக்கிரக போராட்டத்தை உலகத்தமிழ் மாணவர் ஒன்றியமும் இணைந்த அமைப்புக்களும் ஏற்பாடு செய்துள்ளன.

அதே போன்று யாழ் மாவட்டத்தில் யாழ் பிரதான பேருந்து தரிப்பிடத்தில் காலை 10.30 மணிக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினர் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

மேலும் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை 10.00 மணிக்கு பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். வடக்கு கிழக்கில் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் இன்று காலை 10.00 மணிக்கு அம்பாறை மற்றும் திருகோணமலை மக்கள் இணைந்து மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

மேலும் புலம்பெயர் தேசம் எங்கும் சுதந்திர தின எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக புலம்பெயர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

மேற்குறித்த போராட்டகளங்களில் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என அமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன. (மு-9)

கொவிசெத
திகதி 2019.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 2024
H 10 12 34 41
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/02/03
சீட்டிழுப்பு இலக்கம் 3847
W 5 6 1 5 5 6
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/02/03
சீட்டிழுப்பு இலக்கம் 507
மீனம் 02 43 54 66 45
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 110
M 14 20 29 82
தேசிய லொத்தர் சபை

## தேசிய அரசில்...

அதேவேளை, இந்த தேசிய அரசில் இணைந்து கொள்வதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அனுமதிக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் காத்திருக்கின்றனர் என மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திசாநாயக்க தற்போது கூட தேசிய அரசுதான் பதவியில் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசில் அங்கம் வகிக்காவிடினும் கட்சியின் தலைவரான, மைத்திரிபால சிறிசேன அரசின் தலைவராக இருக்கிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தேசிய அரசில் இணைந்து கொள்ளுமாறு தமது கட்சிக்கு இன்னமும் எந்த அதிகாரபூர்வ அழைப்பும் விடுக்கப்படவில்லை என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார். (மு-3)

## புலிகள் செயற்பட...

சாவகச்சேரியில் இடம்பெற்ற கற்றோர் கருத்தறிதலும் மூத்தோர் மூதுரையும் என்ற மக்கள் மனமறியும் கருத்தரங்கு நிகழ்வில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

புலிகளின் நீட்சியே கூட்டமைப்பு எனப் பலரும் பார்க்கின்றனர். ஆனால் புலிகள் செய்ததனைப் போல் எம்மால் செயற்பட முடியாது. காணி பறிபோகிறது. சட்ட விரோத குடியேற்றம் இடம்பெறுகிறது என்றால் புலிகள் செயற்பட்ட விதம் வேறு. நாம் அணுகுகின்ற விதம் வேறு. அவர்கள் செய்ததனைப் போல் நாம் செய்ய இயலாது. ஆனால் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்கிறோம். இதற்கு முடிவும் கட்டுவோம். நாம் புலிகளைப் போல் அல்லாமல் பேரம் பேசும் முறை மூலமாகவே எதனையும் செய்ய முடியும். புலிகள் செய்த தியாகங்களை மதிக்கிறோம்.

ஆனால் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று எவரும் இல்லை. புலிகள் காலத்தில் ஒற்றுமை பேணப்பட்டது என்று சிலர் கூறுகிறார்கள். அந்த ஒற்றுமை எவ்வாறு பேணப்பட்டது? தம்மைத் தவிர வேறு அமைப்பு இருக்கக்கூடாது என்று கட்டளை இடப்படும். அந்தக் கட்டளையை மீறினால் சுடப்பட்டனர். நாம் புதுக்கட்சி தொடங்கியவர்களை இவ்வாறு செய்ய முடியுமா? ஒற்றுமையைப் பேண துப்பாக்கியைப் பயன்படுத்த முடியாது.

ஒற்றுமையைப் பேண வேண்டுமானால் எதிர்த்தரப்பினருடன் நியாயமான முறையில் அணுகிப் பேச வேண்டும். அத்துடன் கூட்டமைப்பில் இருந்து எந்தக் கட்சியையும், எந்தத் தனி மனிதரையும் நாம் வெளியே போகச் சொல்லவில்லை. போனவர்கள் தாங்கள் சுயமாகவே வெளியேறிச் சென்றனர். சிலர் கட்சியில் இருந்து போவதும் வருவதுமாகவும் இருக்கின்றனர். அதனையும் நாம் அனுமதிக்கிறோம். தாமாக வெளியே போய் புதுக்கட்சி ஆரம்பித்தால் நாம் அதனைத் தடுக்க முடியாது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (மு-30)

## 545 கைதிகள்...

சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஆகியோருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமை தொடர்பில் எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் வெளியாகவில்லை.

இலங்கையின் 71ஆவது சுதந்திர தினம் இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது. இதனை தமிழர் தாயகத்தில் கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்புவிடுத்தது. அதற்கு பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் ஆதரவு வழங்கியுள்ளன. (மு-3)

## வல்வெட்டித்துறை...

இடைக்காட்டைச் சேர்ந்த விஸ்ணுகுமார் தனுசன் (வயது-19) என்ற இளைஞரே மரணமானவராவார்.

மேற்படி இளைஞர் ஊரிக்காடு பகுதியில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் அண்மையிலேயே வேலைக்கு சேர்ந்து அங்கு பணியாற்றி வந்துள்ளார்.

சம்பவ தினம் கோழிகள் கொண்டுவரும் பெட்டிகளை அமுக்கு நீர்ப்பாய்ச்சியினால் சுத்தம் செய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதாக கூறப்படுகிறது.

உடனடியாக வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கெனவே மரணமடைந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஊறணி வைத்தியசாலைக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா யாழ். போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-60)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-5348)

ரலண்ட் அக்கடமி
விசுவமடு
2021 A/L, 2020 A/L
கலைப் பிரிவு
தமிழ் - ஜெயந்தன், ஷரன்
புவியியல் - பார்த்திபன்
வரலாறு - SB.SANU
(அனைத்துப் பாடங்களும் நடைபெறுகின்றன)
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு - உதயன்
வணிகக்கல்வி - சுரேன்
பொருளியல் - யசோ
(வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன)
கணித, உயிரியல் வகுப்புக்கள் குழுவகுப்புகளாக நடைபெறுகின்றன.
இணைந்த கணிதம் - நிர்சன்
இரசாயனவியல் - நிருஜன், நவசீலன் (கிளிநொச்சி)
பௌதிகவியல் - நவசீலன் (விசுவமடு)
தொடர்புகளுக்கு: 077 214 0675
(7352)

சிறுநீரகம் தேவை
23 வயதுடைய இளைஞருக்கு B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு:
075 529 0090
(7407)

Green Life Real Estate
Agent & Construction
- வீடு, காணி விற்பதற்கும் வாங்குவதற்கும் தொடர்பு கொள்ளவும்.
- எம்மிடம் 62 வீடுகள் 91 காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
- எமது சேவை நாடளாவிய ரீதியானது.
தொடர்புகளுக்கு:
திரு.சண்
5.30pm to 7.30pm
T.P: 077 555 9028
www.greenlifeinternational.com
G.P.S Road, Kalviankadu, Jaffna.
(7398)

மாலை நேர விசேட இறுதி கருத்தரங்குகள்
அதிபர் சேவை தரம் - 3
செவ், புதன், வியா, வெள்- பிற்பகல் 3.00 - 7.00
சுகாதார முகாமைத்துவ உதவியாளர்
செவ்வாய், வியாழன் 3.00 - 6.00
ஆசிரியர் தெரிவு
செவ்வாய், வியாழன் 3.00 - 6.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு (யாழ்.நகர்)

யாழ். நகரில் (சிங்கள வகுப்பு)
55, டேவிட் றோட், யாழ்ப்பாணம்.
அனைத்துத் தரப்பினருக்கும் சிங்கள வகுப்புக்கள் நடைபெறும். தொடர்புகளுக்கு:
071 441 9274

மோட்டார் சைக்கிள் திருத்துநர்கள் தேவை
பருத்தித்துறையில் நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையத்துக்கு அனுபவம் வாய்ந்த திருத்துநர்கள் தேவை.
077 534 4050
(C-5346)

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalaijaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)
A/L தொழில்நுட்ப பிரிவு - 2021
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
06.02.2019 புதன்கிழமை 3.30pm
நவீன ஆய்வுகூட வசதிகளுடன்....
கிளைகள்: யாழ்ப்பாணம், புத்தூர்(சோமஸ்கந்தா அருகாமை)
0770175346, 077 1703549
(சி-5389)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை
CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை), யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-5375)

VACANCY
We are printing and advertising centre & we have the following vacancy
► Computer Designer - (Male or Female)
கணனி வடிவமைப்பாளர் (ஆண்/பெண்)
HIGHEST SALARY IN JAFFNA FOR CREATIVE PERSON
உங்கள் சுயவிபரக்கோவையை ideasjaffna@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்
ideaS ADVERTISING
936A, K.K.S Road, Naachimar Kovil, Jaffna.
077 636 6860
(சி-5387)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணெ வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.